

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 விடை நல்லோரை வைகாசித் திங்கள் 16ம் நாள் (30-05-2026 சனிக்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



## தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் ஆறாம் ஆண்டு நிறைவும்

## அருள்மிகு ஐம்பூதநாதர் சங்கு நீராட்டும் – வைகாசி விளக்கு (சுவாதி)

# ஈழத்துச் சைவமரபில் துறவுப் பயிற்சி



**பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளிப் பல் உலகினில் உயிர் வாழ்க்கை**
**கண்ட நாதனார், கடலிடம் கைதொழ, காதலித்து உறை கோயில்**
**வண்டு பண் செயும் மா மலர்ப்பொழில் மஞ்ஞை நடம் இடு மாதோட்டம்,**
**தொண்டர் நாள்தொறும் துதிசெய, அருள் செய் கேதீச்சரம் அதுதானே.**

இலங்கையில் சைவ சமயத்தின் வழி நின்று, சைவத்தின் வளர்ச்சி, மேன்மை, மரபைப் பேணுதல் மற்றும் மரபுத்தொடர்ச்சியை உறுதிசெய்தல் குறிப்பாக திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்களைக் கற்றல் மற்றும் கற்பித்தல், மக்கள் சேவை போன்ற சிவபுண்ணியங்களை திருவருள் துணையுடன் செய்ய நினைக்கும் சிவனடியார்கள், நன்னிசையுடன் துறவுக்கான பாதையில் பயணிக்கவிரும்பினால் படிமுறைகளாக எங்கள் மடத்தினால் பயிற்சிகள் வழங்க திருவருள் கைகூடியிருக்கிறது.

நீங்கள் இல்லறத்தில் இருந்தாலும் சரி, திருமணமாகாதவர்களாக இருந்தாலும் சரி இந்த துறவுப் படிநிலைப் பயிற்சில் கலந்துகொள்ளலாம். முழுநேரமாக வருபவர்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் அடிப்படை வாழ்வுக்கான வசதிகள் ஒழுங்குசெய்து தரப்படும்.

**(அ) முதல்நிலை (ஓராண்டு)** திருமுறை மற்றும் சித்தாந்த சாத்திரங்கள் கற்றல். அத்துடன் உங்கள் பக்குவநிலைக்கு ஏற்ப தீக்கை மற்றும் சிவபூசைப் பயிற்சி.

**(ஆ) இடைநிலை (ஆறு திங்கள்)** தமிழக சைவ ஆதீனத்தில் காவியுடை பெறுதல், துறவிற்கான தீக்கை மற்றும் தமிழகத்தில் ஒரு சைவ மடத்தில் துறவுப் பயிற்சி. இதன் முடிவில் இரண்டாம் துறவு தீக்கை எடுத்து குண்டலம், கண்டிகை தரித்து நாடு திரும்பலாம். இந்தக் காலப்பகுதியில் தமிழ்நாடு திருத்தல யாத்திரையும் உள்ளடங்கும்.

**(இ) கடைநிலை (ஓராண்டு)** தென்னாடு சிவமடத்தில் அல்லது இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு சைவமடத்தில் ஓராண்டு காலத் துறவுச் சேவை. இதன்வழி வந்தவர்கள் தகுந்த மேல்நிலைத் தீக்கையின் மூலம் தேவையுள்ள மடங்களுக்கு திருவருட்துணையுடன் ஆதீனமாக அல்லது குருமுதல்வராக குருப்பட்டம் பெறலாம்.

எமது சமயமாகிய சைவசமயத்திற்கு தம்மைத் தந்து, மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் விளங்கச் செய்ய இந்தப் பிறவியில் உங்களுக்கு கிடைத்திருக்கும் ஒரு திருவருள் கருணை இது. இது எல்லா உயிர்களுக்கும் வாய்க்கப்பெறா, மாறாக உய்வடையத் துடிக்கும் உயிர்களுக்கு வழிபாடு மற்றும் மக்கள் சேவையூடான ஒரு முத்திப் பாதை இது.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

**தென்னாடு சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு.**
**கொக்குவில்.**

**தொடர்புகளுக்கு:**
**0707701111, 021 222 9722,**
**thennavan@thennadu.org**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org



## ஏழாம் ஆண்டில் கால் பதிக்கும் தென்னாடு சிவமடம்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமானது, சைவத்தினையும், தமிழ்ப் பண்பாட்டினையும் பேணிப் பாதுகாப்பதற்கும் அவற்றினை அடுத்த தலைமுறையினரிடம் ஊடுகடத்தவும் உருவாக்கப்பட்ட சைவத் தமிழ் மடம் ஆகும்.இந்த மடம், திருவருள் உள்நின்று உணர்த்தியதன் பயனாக, சிவத்திரு.தென்னவன் பார்த்தீபன் (குணரத்தினம் பார்த்தீபன்) அவர்களால் 2020 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கொக்குவில் பதியில் உருவாக்கப்பட்டது. இந்த மடத்தில் அருள்மிகு மனோன்மணி அம்மனுடனுறை அருள்மிகு ஐம்பூதநாதப்பெருமான் மன்னி நிறைந்து அருள்மழை பொழிந்து வருகிறார்.

இது செந்தமிழ் ஆகம வழியில், கல்லால மரத்தின் கீழ் இருந்து ஞானத்தினைப் போதிக்கும் **"தென்முகக் கடவுளை"** ஆதீன முதல்வராக ஏற்று ஒழுகும் சைவத்தமிழ் மடமாகும்.

கடந்த ஆறு வருடங்களாக இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல பகுதியிலும் சைவத்தினையும் தமிழினையும் மேன்மையுறச் செய்யும் பல பணிகளையும் ஆற்றிவருகிறோம். சிவமடத்தின் கிளை அமைப்பான சைவ மாணவர் சபையூடாக இலங்கையில் நாற்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பாக பள்ளித்தலங்களில் சிவலிங்கப் பெருமானை நிறுவி மாணவர் வழிபாட்டினை மேம்படுத்தியுள்ளோம்.

மேலும் பல விழாக்கள், மார்கழிப் பெருவிழாக்கள், திருமுறைப் பயிற்சிகள், தமிழ் பூசைப் பயிற்சிகள், தீக்கை நிகழ்வுகள், பல வெளியீடுகள் என்று எமது மடத்தின் பணி திருவருள் துணையுடன் நீண்டு செல்கிறது. குறிப்பாக தென்னாடு இதழ் எழுபது பதிப்புகளை தாண்டிச்செல்கிறது.

எமது மடத்திற்கு பல புனிதர்கள், ஆதீனங்கள், பெரியோர்கள் வந்து தங்கியிருக்கிறார்கள், வழிபாடுகளை ஆற்றியிருக்கிறார்கள், மக்களுக்கு ஆசிகளை வழங்கியிருக்கிறார்கள். அத்துடன் எமது மடத்தின் வளர்ச்சியில் பலர் உதவி வருகின்றனர். குறிப்பாக தென்னாடு இதழுக்கு யாழ் மற்றும் ஒசுத்திரேலிய வர்த்தகப் பெருமக்கள் சிலர் முன்னின்று உதவி வருகின்றனர்.

அத்துடன் நில்லாது காரைக்கால் அம்மையார் மகளிர் விடுதி கடந்த ஆறுமாத காலமாக தற்காலிக இடத்தில் இயங்கிவருகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத்துறையில் இறுதியாண்டில் கல்வி கற்கும் பல வெளிமாவட்ட மாணவர்களுக்கு இலவசமான தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இதனை விரிவுபடுத்தி காரைக்கால் அம்மையார் மடம் ஒன்றினை நிரந்தரமாக அமைக்கும் முன்னெடுப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.இங்கு மாணவர்கள் மட்டுமல்ல வெளி மாவட்டம், மற்றும் இந்தியாவில் இருந்து தல யாத்திரை வரும் அடியவர்கள் குறைந்த கட்டணத்தில் தங்கிச்செல்லும் வசதிகள் உருவாக்கப்படவுள்ளன.

மேலும் இந்த ஏழாவது வருடத்தில், இலங்கையில் சைவ சமயத்தின் வழி நின்று, சைவத்தின் வளர்ச்சி, மேன்மை, மரபைப் பேணுதல் மற்றும் மரபுத்தொடர்ச்சியை உறுதிசெய்தல் குறிப்பாக திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்களைக் கற்றல் மற்றும் கற்பித்தல், மக்கள் சேவை போன்ற சிவபுண்ணியங்களை திருவருள் துணையுடன் செய்ய நினைக்கும் சிவனடியார்கள், தன்னிசைவில் துறவுக்கான பாதையில் பயணிக்கவிரும்பினால் படிமுறைகளாக எங்கள் மடத்தினால் பயிற்சிகள் வழங்க திருவருள் கைகூடியிருக்கிறது. ஈழத்துச் சைவமரபில் துறவுப் பயிற்சி என்ற இந்த முன்னெடுப்பின் ஊடாக சைவத்திற்கும் தமிழுக்கும் தம்மை கொடுத்து சேவை செய்யும் சீலர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். ஆரம்ப காலத்தில் இருந்தே எமது மடத்தின் நோக்கமாக இது இருந்தபோதும், காலத்தின் தேவை கருதி இதனை துரிதப்படுத்தியுள்ளோம்.

திருவருள் முன்னிற்க, நாங்கள் எமது பணியை தொடர்ந்து வழிவழியாக செய்ய முயற்சிகள் மட்டுமல்ல திருவருளையும் தினமும் வேண்டி வழிபாடுகளை ஆற்றி வருகிறோம். இது ஒரு பெரு மடமாக சைவ உலகில் வளர்ச்சிபெற்ற வேண்டி எல்லாம்வல்ல மனோன்மணி அம்மனுடனுறை ஐம்பூதநாதப்பெருமானை வேண்டி விண்ணப்பம் வைக்கிறேன்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(01-05-2026) – தென்னாட்டின் அறுபத்து ஒன்பதாவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300, மேழம் நல்லோரை, சித்திரைத் திங்கள் 18 ஆம் நாள் (01.05.2026 – வெள்ளிக்கிழமை) சித்திரை நிறைமதி நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இந்துசமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவப்பிரகாசம் சக்திகிரீவன் ஐயா அவர்கள், சிவசேனை அமைப்பின் தலைவர் சிவத்திரு. கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் ஐயா அவர்கள், கனடாவைச் சேர்ந்த சைவசித்தாந்த பீடத்தின் இயக்குனர் மருத்துவர் இராமநாதன் லம்போதரன் ஐயா அவர்கள், மற்றும் மேனாள் வலயக்கல்விப் பணிப்பாளர் சிவத்திரு. அ. அகிலாதாஸ் ஐயா அவர்கள் ஆகிய சிறப்பு விருந்தினர்களும் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், சிவசேனை அமைப்பின் தலைவர் சிவத்திரு. கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் ஐயா அவர்கள், கனடாவைச் சேர்ந்த சைவசித்தாந்த பீடத்தின் இயக்குனர் மருத்துவர் இராமநாதன் லம்போதரன் ஐயா அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் அறுபத்து ஒன்பதாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து, ஏனையோருக்கும் இதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் கடந்த 05-04-2026 அன்று இடம்பெற்ற, தருமபுர ஆதீன சைவசித்தாந்த மையத் தொடக்க விழாவினை சிறப்புற ஒழுங்கமைத்தமைக்காக, தருமபுர அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவன இலங்கை ஒருங்கிணைப்பாளர் சிவத்திருமதி. சிவப்பிரியா ராஜ்குமார் அவர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் வருகை தந்திருந்த அனைத்து விருந்தினர்களும் சச்சிதானந்தம் ஐயா அவர்களினால், பொன்னாடைப் போர்த்தி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

மேலும் சிறப்பு நிகழ்வாக, வழமைபோல் இம்முறையும் கடந்த கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்புகளும் இடம்பெற்றிருந்தன. அந்த வகையில் உயிரியல் பிரிவில் முதலிடம் பெற்ற யா/ காட்லிக் கல்லூரி மாணவன் செல்வன். சந்திரபாலா ஹதுசன், கணிதப் பிரிவில் முதலிடம் பெற்ற யா/ காட்லிக் கல்லூரி மாணவன் செல்வன். அனுரகாந்தன் விஸ்வகாந்தன், வணிகப் பிரிவில் முதலிடம் பெற்ற யா / வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி. தருணிகா பத்மலிங்கம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டிருந்தனர். தொடர்ந்து அடியார்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

(10-05-2026) – தென்னாடு முதல்வர் அவர்களின் தம்பியார் அமரர். குணரத்தினம் சுகந்தீபன் அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (11-05-2026) – அப்பர் சுவாமிகள் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(12-05-2026) – தென்னாடு முதல்வர் அவர்களின் தந்தையார் அமரர். சிவசம்பு குணரத்தினம் அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (15-05-2026) – வைகாசித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (20-05-2026) – நம்பியாண்டார் நம்பி சுவாமிகள் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (21-05-2026) – சேக்கிழார் பெருமான் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(23-05-2026) – தென்னாடு சைவ மாணவர் சபையினால், வடமாகாண சபை வளாகத்தில் நிலைப்படுத்தப்பட்ட, அருள்மிகு சொக்கநாதர் திருக்கோயில் முதலாம் ஆண்டு சங்குநீராட்டு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. இவ்வழிபாடு செந்தமிழ் அருச்சுனைஞர் பிரதாபனார் அவர்களினால் ஆற்றி வைக்கப்பட்டது. (28-05-2026) – வைகாசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(29-05-2026) – எங்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் ஆரம்பிக்கப்பட்டும், அருள்மிகு மனோன்மணியம்மை உடனுறை ஐம்பூதநாதப் பெருமான் திருநிலைப்படுத்தப்பட்டும், ஆறு ஆண்டு நிறைவாகி உள்ள நிலையில், கடந்த வைகாசித் திங்கள் பதினைந்தாம் நாள் (29-05-2026) அன்று ஐம்பூதநாதப் பெருமானுக்கு சங்கு நீராட்டு வழிபாடுகள் மிகவும் சிறப்பாக இறையருளோடு நடைபெற்றன. இவ்வழிபாடு செந்தமிழ் அருச்சுனைஞர் பிரதாபனார் அவர்களினால் ஆற்றி வைக்கப்பட்டது.

**திருச்சிற்றம்பலம்**

# நல்லை ஆதீன வெற்றிடம் ஏற்புடையது அல்ல: மறவன்புலவு க.சச்சிதானந்தன் அவர்கள் தெரிவிப்பு



நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் குரு முதல்வர் பதவி நீண்ட நாட்களாக வெற்றிட மாக நீடிப்பது எந்தவகைப்பாட்டிலும் ஏற்புடையது அல்ல என்று இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் அவர்கள் தெரிவித்துள்ளார். சைவ சித்தாந்தப் பின்னணியில், மும்மலங்களைக் கட்டுக்குள் கொண்டு வந்து அருள் நோக்கி நகரும் தகைமையுடைய, பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு திருநெறிகளையும் ஆழக் கற்றுணர்ந்த ஒரு சிவலிங்க பூசகரே குரு முதல்வராகத் தெரிவு செய்யப்பட வேண்டும். இல்லறத்தாராய் இருந்தாலும் காமக் குற்றச்சாட்டோ அல்லது மோகத்தால் பொருள் கையாடிய குற்றச்சாட்டோ இல்லாத, வரலாறும் நிகழ்காலமும் எதிர்காலமும் அறிந்து சைவத்தை முன்னெடுக்கக்கூடிய ஆளுமை மிக்க வினைத் திறனரான மாமனிதர்கள் நம்மிடையே பலர் வாழ்கின்றனர். இத்தகைய தகுதிகளைக் கொண்ட ஒருவரைக் குரு முதல்வ ராகத் தேடிக் கண்டடைவதே நல்லை ஆதீனத்தின் அடுத்த கட்டத்திற்கான முதற்படியாகும். தருமபுர ஆதீனம் உள்ளிட்ட தொன்மையான சைவ ஆதீன மரபுகளில், தம்பிரான்களையும் வாரிசுப் பரம்பரையையும் உருவாக்குவதே ஒரு குரு முதல்வரின் தலையாய கடனாகக் கருதப்படுகிறது. ஆனால், அண்மையில் சிவனடி சேர்ந்த நல்லை ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்கள், தனக்குப் பின் வாரிசாக எவரையும் உருவாக்கத் தவறிவிட்டார்.

ஏனைய திருமடங்களில் குரு முதல்வரே சொத்துகளுக்கு அதிபதியாக விளங்கும் நிலையில், நல்லை ஆதீனத்தில் மட்டும் நிதியுதவி செய்யும் ஆர்வலர் குழுவினரைச் சார்ந்திருக்கும் ஒரு வித்தியாசமான சூழல் காணப்பட்டது. தனக்குரிய நிதியை ஆர்வலர் குழுவினர் முறையாக வழங்கு வதில்லை என மறைந்த சந்நிதானம் அவர்களே தன்னிடம் பலமுறை வருந்திக் கூறியதாக மறவன்புலவு சச்சிதானந்தன் சுட்டிக்காட்டியுள்ளார். வாரிசுகள் வரக்கூடாது என்றும், நல்லூ ர் குரு முதல்வர் வெற்றிடம் தொடர வேண்டும் என்றும் இந்த ஆர்வலர் குழுவினர் விரும்புகிறார்களோ என்ற சந்தேகம் எழுகின்றது. எனவே, குரு முதல்வராக வருபவர் ஒன்றுக்கு மேற்பட்ட சீடர்களைத் தம்பிரான்களாக உருவாக்கக்கூடிய ஆற்றல் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதோடு, அவரே ஆதீனச் சொத்துகளின் முழுமுதல் அதிகாரியாகவும் விளங்கி, நல்லை ஆதீனத்தின் ஆட்சியைத் தன் கையில் வைத்திருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

# நாதஸ்வர வித்துவான் நல்லூர் பி.சு.பாலமுருகன் அவர்களுக்கு ஞானபண்டித இசை ஞானகேசரி விருது




தொன்மைமிக்க தொண்டை மானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில், சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை யின் ஏற்பாட்டில், ஈழத்தின் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் மதிப்பிற்குரிய நல்லூர் பி.சு.பாலமுருகன் அவர் களுக்கு **"ஞானபண்டித இசை ஞான கேசரி"** என்னும் உயரிய மகுட விருது கடந்த 17-05-2026 (ஞாயிற் றுக்கிழமை) அன்று வழங்கி சிறப் பிக்கப்பட்டது. நல்லூர் கலைக் குடும்பத்தில் பிறந்து, தனது தந்தை சுப்புசாமி மற்றும் இசைமேதை என். கே. பத்மநாதன் ஆகியோரிடம் குருகுல முறையில் இசை பயின்ற இவருக்கு, ஈழத்துத் தமிழிசை மரபிற்கு ஆற்றிவரும் ஒப்பற்ற சேவையைப் பாராட்டி, சந்நிதியானின் பேரருளோடு இவ்விருது வழங்கி வைக்கப்பட்டது.

யாழ் மண்ணின் சைவப் பண் பாட்டை உலகெங்கும் பறைசாற்றி வரும் இவர், டான் குழுமத்தின் '2025-ஆம் ஆண்டுக்கான சாதனைத் தமிழன்' விருது, தருமபுர ஆதீனத் தின் 'நாதஸ்வர கலாநிதி' பட்டம் மற்றும் அமெரிக்க அரசின் சர்வதேச அங்கீகாரங்களைப் பெற்றவர். திரையிசை மோகங்களுக்கு மத்தி யிலும் தூய செவ்வியல் இசையைப் பேணி, ஒரு இராகத்தை மணித்தி யாலக் கணக்கில் பண்ணிசை ( ஆலத்தி ) செய்யும் ஆற்றல் மிக்க இவர், இந்தியாவின் பல மாநிலங்களிலும் ஈழத்து இசையினை முழங்கச் செய்துள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது.

**படம்: சற்குணராசா நிதர்சன் (GL Tharshan)**

திருச்சிற்றம்பலம்

# மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் குருமாருக்கும் சனாதிபதியின் செயலாளருக்கும் இடையில் சந்திப்பு



இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் குருமாருக்கும், சனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க அவர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று, கடந்த 26.05.2026 அன்று முற்பகல் சனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பின் போது, மலையக இந்து குருமார் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சில பொதுவான விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இப்பிரச்சினைகளுக்கு முறையான தீர்வுகளை வழங்குவதற்குத் தேவையான உரிய தலையீடுகளைத் தான் மேற்கொள்வதாகச் சனாதிபதியின் செயலாளர் இதன்போது உறுதியளித்தார்.

மேலும், இக்குறைபாடுகளைத் தொடர்ச்சியாகக் கண் காணித்துத் தீர்ப்பதற்காக, இரண்டு அல்லது மூன்று மாதங் களுக்கு ஒருமுறை கூடி இது குறித்துக் கலந்துரையாடுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. மலையக மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் பல்வேறு வேலைத்திட்டங்கள் குறித்தும் இங்கு விரிவாகக் ஆராயப்பட்டதுடன், தங்களின் நீண்டகாலப் பிரச்சினைகள் குறித்துக் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு இத்தகையதொரு நல்வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தமைக்காக அரசாங்கத்திற்குத் தமது நன்றியினை இந்து குருமார் ஒன்றியத்தினர் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றி யத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ வேலு சுரேஷ் சர்மா குருக்கள் உள்ளிட்ட குருமார் பெருமக்களும், சனாதிபதியின் மொத்த மேலதிக செயலாளர் ரோஷன் கமகே அவர்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப் பாளர் ய. அநிருத்தனன் ஆகியோர் உட்படப் பல உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

**திருச்சிற்றம்பலம்**

# மன்னாரில் சைவசித்தாந்தச் செம்மல் கற்கைநெறி ஆரம்பம்



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், மன்னார் மாவட்டச் செயலகம், கொழும்பு திருக்கேதீச்சரம் அன்னபூரணி அமைப்பு மற்றும் மனிதநேய நம்பிக்கை நிதியம் ஆகிய நிறுவனங்களின் பிரதான அனுசரணையுடனும், திருக்கேதீச்சரம் அம்மை அப்பன் இல்லம், திருக்கேதீச்சரம் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் திருவாசகமடம் மற்றும் பிரித்தானியா அருள்மிகு உச்சிமுருகன் கோயில் ஆகியவற்றின் அனுசரணையுடனும் வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீச்சரத் திருத்தலச் சூழலில் ஓர் ஆண்டுக்கான அடிப்படைச் சைவசித்தாந்தப் பயிற்சிநெறி கடந்த 02-05-2026 அன்று மிகச் சிறப்பாக ஆரம்பமானது.

மடுப்பிரதேச சைவப் பேரவையின் ஏற்பாட்டில், இலங்கை சைவநெறிக் கழகத்தின் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் சைவசித்தாந்தச் செயற்குழுவினால் **"சைவசித்தாந்தச் செம்மல் கற்கைநெறி"** என்னும் பெயரில் இக்கல்விப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. திருக்கேதீச்சரநாதர் உடனுறை கௌரியம்பாளின் திருவருளோடு இனிதே தொடங்கிய இக்கற்கைநெறியில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 65 கற்கைநெறியாளர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்ட னர்.

இவ்வுயரிய கற்கைநெறியைத் தொடர்ந்து திங்கள்தோறும் (மாதம்) இரு வகுப்புகள் வீதம் நடத்தி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள துடன், இப்பயிற்சி நெறி எம்பெருமானின் திருவருளால் தடங்கலின்றிச் சிறப்பாய் நடைபெற இறைபிரார்த்தனைகளும் செய்யப்பட்டன. இந்நிகழ்வின் படங்களை மடுப்பிரதேச சைவப் பேரவையின் உறுப்பினரான இரணை இலுப்பைக் குளத்தைச்சேர்ந்ததிரு.ந.சிறிகாந்தன்அவர்கள்ஆவணப்படுத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!**

# ஈழத்துச் சிதம்பரம் திருக்குட நன்னீராட்டு பத்திரிகை பார்த்தல்



தருமபுரம் ஆதீனம் - குருமகாசந்நிதானம்



மதுரை ஆதீனம் - குருமகாசந்நிதானம்

# ஈழத்துச் சிதம்பரம் திருக்குட நன்னீராட்டு பத்திரிகை பார்த்தல்




பழநி ஆதீனம் - குருமகாசந்நிதானம்
(சாது சாமிகள் மடம்)



செங்கோல் ஆதீனம் - குருமகாசந்நிதானம்




திருவாவடுதுறை ஆதீனம் - குருமகாசந்நிதானம்

# ஈழத்து சித்தர்கள்

# கடையிற் சுவாமிகளும் சீடர்களும்



சித்த வைத்தியர்
கணேஸ் கபிலன்
(யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்)

ஈழத்து சித்தர்களில் முக்கியமானவர் கடையிற் சுவாமிகள். இவரைப் பெரிய கடைச்சுவாமிகள், ஆதி கடைநாதன் என்று அழைப்பார்கள். யாழ்ப்பாணத்து சித்தர் மரபில் முதலானவர் என்றே கூறலாம். இவரது குருவாக சீர் நரசிம்ம பாரதி கருதப்படுகின்றார். யாழ்ப்பாணத்தில் இவருடைய காலத்துக்கு முதலும் ஏராளமான ஞானிகள் வாழ்ந்திருக்கலாம் ஆனால் ஒரு பெரிய குருசீட பரம்பரையை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். இவரது சமாதிக் கோயில் நீராவியடியில் அமைந்துள்ளது.

இவரைப் பற்றிய வரலாறுகள் நூல்களில் வந்துள்ளன. கொழும்புத்துறை சீர் ஏ. சுப்ரமணிய ஐயர் யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள் என்ற நூலை எழுதியுள்ளார். ஆனால் அந்த நூல் பற்றிய வேறு தகவல்கள் தெரியவில்லை. மேலும் ஆத்மஜோதி இதழில் 1957ம் ஆண்டு கடையிற் சுவாமிகளைப் பற்றிய சில குறிப்புகளுடன் கட்டுரை வெளிவந்துள்ளது.

அதன் பின் பண்டிதமணி மு. கந்தையா அவர்கள் நிறைய தகவல்கள் திரட்டி குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையும் என்ற நூலை எழுதியுள்ளார். அந்த நூல் இல்லாவிட்டால் நிறைய வரலாறுகள் தெரியாமல் போயிருக்கலாம். 1965ம் ஆண்டு வெளியானது.

இதன் பிறகு ஆத்மஜோதி முத்தையா அவர்கள் எழுதிய ஈழத்துச் சித்தர்கள் நூலும் கடையிற் சுவாமிகளின் வரலாறுகளை கூறுகின்றது. இது 1980 ம் ஆண்டு வெளியானது. மேலும் கா. சி. குலரத்தினம் அவர்கள் எழுதிய கடையிற் சுவாமிகள் சமாதி கோயில் திருக்குட நன்னீராட்டு மலரிலும் சில குறிப்புகள் உள்ளன. 1975ம் ஆண்டு இந்நூல் வெளியானது. இக்கட்டுரையில் கடையிற் சுவாமிகளின் சீடர்கள் மற்றும் அன்பர்கள் பற்றிய குறிப்புகளை எழுதுகின்றேன்.

(1) வைரமுத்துச் செட்டியார் – இவருக்காகத் தான் கடையிற் சுவாமிகள் (முத்தியானந்த சுவாமிகள்) யாழ்ப்பாணம் வந்தார் என்று கூறப்படுகின்றது.

வைரமுத்துச் செட்டியார் கடையிற் சுவாமிகளிடம் முறையாக உபதேசம் பெற்று முற்றிப்பழுத்த அடியாரானார். அவர் தமக்குச் சொந்தமான காணிக் நிலங்களை கொடை தானம் செய்தார். அவர் கொடை தானம் செய்த நிலத்தில் தான் அன்னசத்திர



மடம் (கந்தர்மடம்) அமைந்துள்ளது. இன்றும் செட்டியார் பயன்படுத்திய கட்டில் மற்றும் ஏனைய பொருட்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

(2) சின்னையா சுவாமிகள் – மண்டைதீவைச் சேர்ந்தவர். இவர் கடையிற் சுவாமிகள் மற்றும் மண்டைதீவு நண்ணியர் சுவாமிகள் மூன்றும் பேரும் மண்டைதீவில் ஒன்றாக திரிந்தவர்கள். இவர்களுடனான வரலாற்றை பண்டிதர் மு. கந்தையா அழகாக தன் நூலில் எழுதியுள்ளார்.

இவரது சமாதிக் கோயில் அன்னசத்திரமடத்தில் அமைந்துள்ளது. கடையிற் சுவாமிகள் தான் தனக்கு நீராவியடியிலும் தன் சீடனான சின்னையா சுவாமிகளுக்கு அன்னசத்திர மடத்திலும் சமாதி அமைக்குமாறு கூறியுள்ளார். மேலும் கச்சாய்ப் பகுதியில் உள்ள ஒரு குடும்பம் இன்றும் தங்கள் வீடுகளில் சின்னையா சுவாமிகளின் திருவுருவப் படத்துக்கு உணவு படைத்த பின்னர் உண்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

மேலும் கடையன் குருபூசை என்று விசேடமாக செய்யப்பட்டு மீன், இறைச்சி மற்றும் முட்டை போன்றவற்றை சின்னையா சுவாமிகளுக்கு படைத்து வழிபாடு செய்கின்றனர். கடையிற் சுவாமிகள் வடிவில் சின்னையா சுவாமிகளை வழிபடுகின்றனர். இல்லறத்தில் இருந்து துறவறம் போனவர். இன்றும் இவரது பரம்பரையினர் வாழ்ந்து வருகின்றனர்.

(3) மண்டைதீவு நண்ணியர் சுவாமிகள் – இவரும் கடையிற் சுவாமிகளும், சின்னையா சுவாமிகளும் சேர்ந்து செய்த அற்புதங்கள் ஏராளம். இவரது சமாதிக் கோயில் மண்டைதீவு சிவன் கோயிலின் பிள்ளையார் சந்நிதிக்கு கீழே உள்ளதாகக் கூறப்படுகின்றது. இவரது வீட்டின் ஒருபகுதி தான் இன்றும் மண்டைதீவு கடையிற் சுவாமி ஆச்சிரமமாக உள்ளது.

சிறுப்புலம் சீர் சுப்பிரமணிய சுவாமி கோயிலிற்கு அருகில் அமைந்துள்ளது. இவருக்கு நேரடிப் பரம்பரை இல்லா விடிலும் இவரது உறவினர் வழிப் பரம்பரையினர் இன்றும் உள்ளனர்.

(4) குழந்தைவேற் சுவாமிகள் – கடையிற் சுவாமிகளின் சீடர் பரம்பரையில் குழந்தைவேற் சுவாமிகள் முக்கிய இடம் பெறுகின்றார். இவரது சமாதிக் கோயில் கீரிமலையில் உள்ளது. இவரது பரம்பரையினர் இன்றும் தாவடியில் உள்ளனர். குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையும் நூலில் குழந்தைவேற் சுவாமிகள் பற்றிய தகவல்கள் நிறைய உள்ளன.

(5) சிவானந்த மௌனகுரு சுவாமிகள் – ரட்ண பிரகாசம் அவர்கள் எழுதிய SIVAYOGASWAMI AND GURU PARAMPARAI IN JAFFNA நூலில் இவர் கடையிற் சுவாமிகளின் சீடர் என்று குறிப்பிட்டுள்ளார். கச்சாயில் மௌனகுரு சுவாமிகள் என்ற பெயரில் சமாதிக் கோயில் உள்ளது. ஆனால் அவருக்கு திருவுருவப் படம் இல்லை. அங்குள்ளவர்களுக்கு வரலாறுகள் தெரியவில்லை. அவர் தான் இவரோ என்பது ஊகிக்க முடியாதுள்ளது.

(6) பரமகுரு சுவாமிகள் – குழந்தைவேற் சுவாமிகளின் மற்றொரு குருநாதர். கடையிற் சுவாமிகளால் வரவழைக்கப்பட்டவர் என்று கூறப்படுகின்றது. இவரது சமாதிக் கோயில் மாத்தளையில் உள்ளது.

(7) செல்லப்பா சுவாமிகள் – கடையிற் சுவாமிகளும் இவரும் சந்தித்ததாக இரு சந்தர்ப்பங்களை மட்டுமே வரலாறுகள் கூறுகின்றனர். கடையிற் சுவாமிகளின் இன்னொரு சீடர் பரம்பரையாக செல்லப்பா சுவாமிகள், யோக சுவாமிகளைக் கூறுகின்றனர்.

(8) பொன்னம்மாள் அம்மையார் – இவர் ஏழாலையைச் சேர்ந்தவர். இவரது சமாதிக் கோயில் உசனில் உள்ளது. ஆத்மஜோதி முத்தையா இவரை கடையிற் சுவாமிகளின் உள்ளார்ந்த பெண் சீடர் என்று குறிப்பிடுகின்றார்.

மேலும் பெரியகடையில் கடையிற் சுவாமிகள் செய்த அற்புதங்களில் ஒன்று இரும்புத்துண்டை பொன்னாக்கியது. அச்சந்தர்ப்பத்தில் கூறப்படும் பொன்னம்மா அம்மையாரும் இவரும் ஒன்றா என்பது ஆராயப்பட வேண்டியது.

(9) சடைவரத சுவாமிகள் – சுவாமிகள் எட்டுவயது சிறுவனாயிருந்த போது, வேறு பல பிள்ளைகளுடன் சுவாமிகளைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். கடையிற் சுவாமிகள் அவரைக் கண்டமாத்திரத்தே ஆனந்தக் கூத்தாடி அவரைத் தனியாக அழைத்துச் சென்று கட்டிப்பிடித்துக் கொஞ்சித் தம் தலையிலிருந்த தொப்பியைக் கழற்றி அவர் தலையிற் சூட்டி ஆனந்தித்தார்கள் என்று கூறப்படுகின்றது.

(10) சின்னாச்சிப்பிள்ளை அம்மையார் மற்றும் அருளம்பல சுவாமிகள் – தவத்திரு. அருளம்பல சுவாமிகளின் தாயார் சின்னாச்சிப்பிள்ளை அம்மையார். குழந்தைவேற் சுவாமிகளின் சீடர் தான் அருளம்பலம் சுவாமிகள். இவரது சமாதி கீரிமலையில் உள்ளது. கடையிற் சுவாமிகளைக் குழந்தையாகப் பாவித்து அவருக்கு அன்னங்குழைத்து ஊட்டி வருவார் சின்னாச்சிப்பிள்ளை அம்மையார். அம்மையாரின் கடைக்குட்டியான அருளம்பலம் மூன்று வயதுப் பாலகனாய் சுவாமிகளுக்கருகிலிருந்து அவர் உண்ணும் போது அவருடைய உணவில் பங்கெடுப்பதுண்டு.

(11) வல்வெட்டித்துறை தண்டேல் எனும் சீடர் – ஒருமுறை சுவாமிகளைத் தேடி வண்ணார்பண்ணை சென்றார். சுவாமிகள் மண்டைதீவு சென்றதறிந்து அங்குச் சென்றார். செல்லும்பாதை மணல் நிறைந்த வெளி. மத்தியானநேரம். காலும் உடம்பும் தலையும் வெப்பத்தினால் வெந்தன. வெப்பம் தாங்கமாட்டாது குருநாதா என்று வாய்விட்டுக் கூவினார். அதேநேரத்தில் கொட்டிலில் படுத்திருந்த சுவாமிகள் எழுந்து அகோரம்! அகோரம்! வெப்பந்தாங்க முடியவில்லை என்று கூறி குடை ஒன்றை விரித்து தமது கால்பக்கத்திற்குப் பிடிக்குமாறு அருகே இருந்த ஒரு அன்பரிடம் கூறினார். அவர் காரணம் அறியாது குடையைப்பிடித்த வண்ணமே இருந்தார். சுவாமிகள் சாய்ந்து படுத்துவிட்டார். யாரோ நடந்துவரும் சத்தம் கேட்டது. சுவாமிகள் உடனே குடைபிடித்தது போதும் சுருக்கிக்கொள் என்றார். வந்த தண்டேல், சுவாமிகளுடைய பாதங்களில் பணிந்து சுவாமிகளுடைய கருணையை நினைந்து நினைந்து கண்ணீர் வடித்து நின்றார்.

இவ்வாறு ஏராளமான சீடர்களும் அன்பர்களும் இருந்தார்கள் என்பது உறுதியாகின்றது. இதன் மூலம் ஒரு சீடர்பரம்பரை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்


# தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# ஞானத்தின் ஒளி பரவட்டும்!

வரும் ஆனி மூல விண்மீனில் ஆளுடையபிள்ளையாய் தோன்றி சைவத்தமிழ் உலகின் தலைமகனாய் விளங்கிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது குருபூசை நன்னாள் வருகின்றது!

**“தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடி”** எனத் தொடங்கிய அவரது முதல் தேவாரமே, சைவத் தமிழ் உலகின் மீளெழுச்சிக்கும் புரட்சிக்குரலாக அமைந்தது. சிறுவயதிலேயே இறையருளால் ஞானம் பெற்ற சம்பந்தர், தமிழை வெறும் மொழியாக அல்லாது இறைநெறியின் ஆதாரமாக உயர்த்தினார். அவர் பாடிய தேவாரங்கள் தான் மந்திரமாகவும் ஆகமமாகவும் நமக்கும் இறைவனுக்கும் இடையான பிணைப்பை வலுப்படுத்துகின்றன.

அவரது காலம் தத்துவப் போட்டிகளாலும் சிந்தனை மோதல்களாலும் நிறைந்திருந்தது. அந்தச் சூழலில், பத்தி, அன்பு, ஞானம் ஆகியவற்றின் மூலம் மக்களை ஒன்றிணைத்தார். **“வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்”** என்று இறைவனைப் போற்றிய அவரது பாடல்கள், பயத்தை விட நம்பிக்கை கலந்த பத்தியை மக்களின் உள்ளங்களில் விதைத்தன.

இன்றைய உலகம் வேகமாக முன்னேறுகின்ற போதிலும், மனித மனம் அமைதியை இழந்து வருகிறது. தொழில்நுட்ப வளர்ச்சி உயர்ந்தாலும், பண்பாட்டு வேர்கள் பல இடங்களில் தளர்ந்து வருகின்றன. குறிப்பாக இளம் தலைமுறையினர் தமது மரபு, மொழி, சமய இலக்கியங்கள் ஆகியவற்றிலிருந்து விலகிச் செல்லும் நிலை கவலைக்குரியது. இப்படிப்பட்ட நேரத்தில், திருஞானசம்பந்தரின் குருபூசை எமக்கு ஒரு விழிப்புணர்வு அழைப்பாக அமைகிறது.

குருபூசை என்பது பூசை வழிபாட்டை நடத்துவதால் மட்டும் நிறைவுபெறாது. அவரின் வாழ்வியலை சமூகத்தில் மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும். தேவாரப் பாராயணம், திருமுறைப் பயிற்சி, இளையோருக்கான சமய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தமிழ்ச் சைவ மரபை எடுத்துரைக்கும் உரைகள் ஆகியவை அதிகரிக்கப்பட வேண்டும். **“சித்தம் தெளிவீர்காள் அத்தன் ஆரூரைப் பத்தி மலர் தூவ முத்தி எளிதாமே”** என்ற சம்பந்தரின் வாக்கு, பத்தி வழியே மனித வாழ்வு உயர முடியும் என்பதை நினைவூட்டுகிறது.

திருஞானசம்பந்தர் காட்டிய பாதை, தமிழரின் ஆன்மிகப் பாதை மட்டுமல்ல அது ஒழுக்கம், அன்பு, பண்பாடு, இறைநம்பிக்கை ஆகியவற்றின் வாழ்வியல் வழிகாட்டுதலாகும். எனவே, இவ்வருட குருபூசையை வெறும் சமய நிகழ்வாக அல்லாது, தமிழ்ச் சைவ அடையாளத்தை புதுப்பிக்கும் ஆன்மிக எழுச்சி நாளாக நாமெல்லோரும் மாற்றுவோம்!

**திருச்சிற்றம்பலம்**

# சிவபுராண விளக்க உரை



**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**

மேலும் **"ஞாலமே! விண்ணே! பிறவே! அறிவரியான்"** என்றார் திருவெம்பாவையில்.

பெத்த நிலையில் திரோதான சத்தியாய் இருந்து தன்னை மறைத்து உலகை காட்டியும், வினையை அனுபவிக்குமாறு செய்யும் அருளையும், பக்குவத்தால் உயர்ந்த காலத்தில், முத்தி காலத்தில், உலகை மறைத்து தன்னைக் காட்டி திருவடியில் வைத்து அருளுதல் என்று இரு வகையான அருள்களை தன் பொருட்டுச் செய்யாமல் செய்கிறார் என்று மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் சொல்லுகிறார்.

சிவபுராணத்தில் வருகின்ற ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய் என்பதை திருவெம்பாவையின் கடைசி பாடலில்,

**"போற்றி எல்லா உயிர்க்கும் தோற்ற மாம் பொற்பாதம்"** என்று படைத்தலையும்,

**"போற்றி எல்லா உயிருக்கும் போக மாம்"** என்று காத்தலையும்,

**"போற்றி எல்லா உயிர்க்கும் ஈராம் இணையடிகள்"** என்று அழித்தலையும்,

**"மால்,நான்முகனும் காணாத புண்டரி கம் போற்றி"** என்று மறைத்தலையும்,

**"யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள் போற்றி"** என்று அருளலையும் சொல்லுகிறார் என்று சொல்பவர்களும் உண்டு. இந்த ஐந்தொழிலும் தன்பொருட்டு செய்யாமல் உயிர்கள் உய்வடையும் பொருட்டுச்



**பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி மீ.சிவசண்முகம், கோயம்பத்தூர், தமிழ்நாடு.**

செய்கின்றான் என்று மாபாடியத்தில் மாதவச் சிவஞான முனிவர் கூறுகிறார்.

சேற்றில் இருந்த மாணிக்கத்தை எடுத்து தன் திருவடியில் சேர்க்கிறான் பெருமான்.

சேறு என்பது இங்கு ஆணவ மலத்தை குறிக்கிறது. ஐம்புல வேடர்களில் இருந்து உயிர்களை காப்பாற்றி தன் திருவடியில் சேர்க்கிறான். இதைத்தான் சித்தியாரில் (253)

**"துன்னிய ஐம்புல வேர் சூழலில் பட்டுத் துணைவனையும் அறியாது துயர் உறும் தொல் உயிரை மன்னும் அருள் குருவாகி வந்து அவரின் நீக்கி மலம் அகற்றித் தானாகி மலரடி கீழ் வைப்பன்"** என்று அருளுகிறார்.

**43."போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின் தொழும்பின்"**

**"என்னை"** என்பதை முதலில் கூட்டி **"என்னை போக்கு வாய், புகுவிப்பாய் நின் தொழும்பின்"** என்று கொண்டு கூட்டுச் செய்க. என்னை உன் தொண்டில் ஈடுபடாதவாறு நீக்குகின்றவனும் நீயே, அதன் கண் ஈடுபடச் செய்கின்றவனும் நீயே, என்றபடி இரு வேறு நிலையும் எனது பக்குவத்திற்கு ஏற்றபடியாம் என்றல் திருவுள்ளம், என்பது அருணை வடிவேலு முதலியார் உரை.

**போக்குவாய்:-** போகச் செய்வாய்.

கேவலத்தில் கிடந்த நம்மை சகலத்திற்கு அனுப்பினான் என்பது பொருள். அரசன் **"வீரனை போரில் போக்கினான்"** என்பது போல திரோதானச் சத்தியால் மறைத்துப் பல வகை பிறவிகளில் செலுத்துதல் என்னும் பொருளில் வந்தது.

இப்பிறவிக்கு வந்த பின்பு அடுத்த பிறவி என்ன என்றோ? அடுத்த பிறவியை நிச்சயம் செய்யவோ? ஆற்றல் இல்லை. போன பிறவியின் வினையை இந்தப் பிறவியில் அனுபவிக்கிறோம் என்று தெரிந்தாலும் அடுத்த பிறவி இருக்குமா இல்லையா என்று தெரியாது.

**"நாயிற் கடையாம் நாயேனை**
**நயந்து நீயே ஆட்கொண்டாய்**
**மாயப் பிறவி உன் வசமே**
**வைத்திட்டு இருக்கும் அது அன்றி,**
**ஆயக்கடவேன் நானோ தான்?**
**என்னதோ இங்கு அதிகாரம்?**
**காயத்திடுவாய், உன்னுடைய**
**கழல் கீழ் வைப்பாய் கண்ணுதலே"**

மாயப்பிறவி உன் கையில் உள்ளது அது தெரியாமல் இங்கு அதிகாரம் செய்து கொண்டு உள்ளாய். என்னை உடலினுள் வைப்பாயா? அல்லது திருவடி கீழ் வைப்பாயா? என்பது உனக்கு மட்டுமே தெரியும் என்கிறார் குழைத்தப்பத்தில்.

முந்தைய பாட்டில்,

**"நன்றே செய்வாய் பிழை செய்வாய்?**
**நானோ இதற்கு நாயகமே!"** என்று சரணாகதி அடைந்தார்.

அடுத்த பாட்டில்,

**"மண்மேல் யாக்கை விடுமாறும்**
**வந்து உன் கழற்கே புகமாறும்**
**அண்ணா என்னக் கடவேனோ ?**
**அடிமைசால அழகுடைத்தே!"**

என்பதில் பிறவி நீங்கி உன் திருவடியை அடைய வேண்டும், என்று நினைக்க நான் உரிமை உடையேனோ? உடையேன் எனின் எனது அடிமைத்தனம் மிகவும் அழகுடையது என்று அருளுகிறார். என்றும் அவனுக்கு அடிமை என்று உணர்வது பக்குவத்தில் உயர்ந்தது. **"மீளா அடிமை"** என்று உணர வேண்டும் என்று அருளாளர்கள் பாடியுள்ளனர்.

ஆனால் சகலத்தில் நாம் அவனுக்கு அடிமை என்பதையே உணராமல் உள்ளோம். கேவலத்தில் அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த உயிருக்குத் தன்னுடைய இழிநிலையை அறிந்து கொள்ளவும், அதனை நீக்கிக் கொள்ளவும் ஆற்றல் இல்லை. அப்படிப்பட்ட என்னைச் சகலத்தில் போக்குவிப்பாய். பின்பு உன் அடிமையாக உன் திருவடியில், அடியார் கூட்டத்தில் புகுவிப்பாய். இதையே,

**"போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின் தொழும்பில்"** என்றார்.

**தொழும்பு:-** அடிமைத்தனம். அடிமைத்தனம் அடியார் உடைய இலக்கணம்.

**"உன் அடியார் தாள் பணிவோம்**
**ஆங்கு அவர்கே பாங்கு ஆவோம்**
**அன்னவரே என் கணவர் ஆவார் அவர் உகந்து**
**சொன்ன பரிசே தொழும் பாய் பணி செய்வோம்"**

அடியவர்களுக்கு அடிமையாக இருந்து பணி செய்வோம் என்பது பொருள்.

தொழும்பு என்றால் இராணுவ ஒழுக்கம் அடிமைத்தனத்தில். அப்படிப்பட்ட உன் அடியார் கூட்டத்துள் என்னை புகுவிப்பாய்.

**"அடியார் நடுவில் இருக்கும் அருளை புரியாய்"** என்று தான் கோயில் மூத்த திருப்பதிகத்தில் விண்ணப்பம் செய்கிறார். ஏனென்றால் பெருமான் அடியார் கூட்டத்தில் இருக்கிறார்.

**"பந்தணை விரலியும், நீயும் நின் அடியார்**
**பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே"**

என்று திருப்பள்ளி எழுச்சியில் அடியார் நடுவில் பெருமான் இருப்பதாக கூறுகிறார்.

குரு, லிங்க, சங்கமம் வழிபாடு ஆணவம், கன்மம், மாயை நீக்கும் மருந்து. குரு வழிபாடு ஆணவத்தையும், சங்கம வழிபாடு கன்மத்தையும், அடியார்கள் வழிபாடு மாயையும் நீக்க வல்லது. எனவே மாயாமலம் நீங்க அடியார்களுடன் இருக்க வேண்டும். சிவ கவிமணி ஐயா அவர்கள் பெரியபுராணத்தில் வாசனா மலம் தாக்காமல் இருக்க அடியாருடன் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

மேலும் மெய்கண்டார் பன்னிரண்டாம் நூற்பாவில்,

**"மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே"**


என்று அடியாரை, பெருமானாக தொழ வேண்டும் என்று சொல்லுகிறார். எனவே சகலத்தில் இருந்து கேவலத்திற்கு என்னைக் கொண்டு செலுத்துபவன் நீயே, அடிமைப் பண்பு மிக்கவனாக அடியார் கூட்டத்தில் இருக்கச் செய்பவனும் நீ யே என்பதையே **"போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின் தொழும்பில்"** என்று கூறுகிறார்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்




**“சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்”**

### திருவொற்றியூரில் சங்கிலியாரின் தெய்வத்தன்மை

சங்கிலியார் மானிட வரம்புக்கு உட்படாத திருமேனிப் பொலிவுடனும், அதீத தெய்வத்தன்மை பொருந்திய குணநலன்களுடனும் வளர்ந்து மங்கைப் பருவத்தை எய்துகின்றார். ஒரு சமயம் அவர்தம் பெற்றோர், ‘விரைவில் இவளுக்கு மணமுடிப்போம்’ என்று தங்களுக்குள் உரையாடுவதைச் சங்கிலியார் கேட்கின்றார். **“ஆ! இத்திருமணப் பேச்சு பொருந்தாத ஒன்றன்றோ! எம்பெருமான் ஈசனின் அடித்தொண்டர் ஒருவர்க்கே யான் உரிமையானவள்”** என்று ஆழ்மனதில் உணர்ந்த அவர், பெற்றோர் செயலுக்கு அஞ்சி உணர்விழந்து நிலமிசை வீழ்கின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு விவரிக்கின்றார்:

**தாயரோடும் தந்தையார் பேசக் கேட்ட சங்கிலியார்
ஏயும் மாற்றம் அன்றித் எம்பெருமான் ஈசன் திருவருளே
மேய ஒருவர்க்குரிய(து) யான் வேறென் விளையும் என வெருவுற்று
ஆய உணர்வு மயங்கிமிக அயர்ந்தே அவனிமிசை விழுந்தார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 211)**

புதல்வியின் மனநிலையறியாது பெற்றோர் திகைத்திருக்க, அவர்களின் குடிப்பிறப்போடு ஒத்த இளைஞன் ஒருவன் சங்கிலியாரை மணம் பேச ஆட்களை அனுப்புகின்றான். ஆனால், அவர்கள் வந்து சேர்வதற்கு முன்பே அந்த இளைஞனுக்கு மரணம் சம்பவிக்கின்றது. இச்செய்தியைக் கேட்ட பெற்றோர், “நம் மகள் சாதாரணப் பெண் அல்லள் தெய்விகத்தன்மை பொருந்திய அணங்காவாள். ஈசனின் பெருமையல்லாது வேறொன்றும் அறியாத இவளின் எண்ணப்படியே விட்டுவிடுவதே தகுந்தது” என்று தெளிந்து, சுற்றத்தாருடன் சங்கிலியாரைத் திருவொற்றியூருக்கு அழைத்துச் செல்கின்றனர்.

**அணங்கேயாகும் இவள்செய்கை அறிந்தோர் பேச அஞ்சுவரால்
வணங்கும் ஈசர் திறமன்றி வார்த்தை அறியாள் மற்றொன்றும்
குணங்களில் அவையாம் இனிஇவள் தான் குறித்தபடியே ஒற்றிநகர்ப்
பணங்கொள் அரவச் சடையார் தம்பால் கொண்டணைவோம் எனப்பகர்வார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 217)**

ஒற்றியூர் ஆலயத்தில் படம்பக்கப் பரம்பொருளைப் பணிந்து, ஆலயத்திற்கு அருகிலேயே ஒரு கன்னி மாடத்தை அமைத்து, அதற்குத் தேவையான செல்வத்தையும் சூழலையும் ஞாயிறு கிழார் உண்டாக்குகின்றார். மகளேயாயினும் இவள் தெய்வத் தொண்டிற்காக மண்மிசைத் தோன்றிய சிவஞானச் செல்வி எனும் தெளிவோடு அவளது திருவடிகளை வீழ்ந்து வணங்குகின்றார்.

**சென்னி வளர்வெண் பிறையணிந்த சிவனார் கோயிலுள் புகுந்து
துன்னும் சுற்றத்தொடும் பணிந்து தொல்லைப் பதியோர் இசைவினால்
கன்னிமாட மருங்கமைத்துக் கடிசேர் முறைமைக் காப்பியற்றி
மன்னும் செல்வம் தகவகுத்துத் தந்தையார் வந்தடி வணங்கி**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 220)**

**“அம்மையே! நாங்கள் உனக்கு ஏவல் செய்ய, இக்கன்னி மாடத்தில் இனிது உறைந்து ஈசனுக்குரிய பணிகளைச் செய்வீர்”** என்று கூறிச் சுற்றத்தினருடன் மீண்டுமொரு முறை வணங்குகின்றார். பின்னர் மகளாரின் பிரிவைத் தாங்க மாட்டாமல் கண்களில் நீர் தாரையாக ஒழுக, ஏங்கியவாறே தம் ஊருக்குத் திரும்பிச் செல்கின்றார்.

யாங்கள் உமக்குப் பணிசெய்ய ஈசற்கேற்ற பணிவிரும்பி
ஓங்கு கன்னி மாடத்தில் உறைகின்றீர் என்றுரைக்கின்றார்
தாங்கற்கரிய கண்கள்நீர்த் தாரை ஒழுகத் தரியாதே
ஏங்கு சுற்றத்தொடும் இறைஞ்சிப் போனார் எயில்சூழ் தம்பதியில்

- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம் - திருப்பாடல் 221)

இவ்வாறு கன்னி மாடம் புகுந்த சங்கிலியார், உலகியலைத் துறந்து, மிகுந்த பத்தியோடு திருவொற்றியூர் நாதருக்கு மலர்மாலை தொடுக்கும் திருப்பணியைச் செய்துகொண்டு அங்கேயே தங்கியிருக்கலானார்.


## திருவொற்றியூர் மலர் மண்டபத்தில் ஒரு காதல் திருக்காட்சி

சுந்தரர் திருவொற்றியூர் கோயிலில் ஆதிபுரீசுவரப் பரம்பொருளை வணங்கி மகிழ்கின்றார். பின்னர், ஆலய வளாகத்தில் பல்வேறு திருப்பணிகள் புரியும் அடியவர்களை ஆங்காங்கே தொழுதவாறே மலர் மண்டபத்தினுள் செல்கின்றார். அங்கு இறைவனுக்கான திருமாலைகளைத் தொடுத்துக் கொண்டிருக்கும் அடியவர் பெருமக்களைப் பணிந்து செல்லுகையில், பண்டைய ஊழ்வினை கூட்டுவிக்க, திரை சற்று விலகிய கணநேரத்தில், அதுவரையில் தொடுத்திருந்த மாலைகளைக் கொடுத்துவிட்டு மின்னலென மறையும் சங்கிலிப் பிராட்டியாரைத் தற்செயலாகக் காண்கின்றார். இக்காட்சியினைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு விவரிக்கின்றார்:

அன்பு நாரா அஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க அலர்தொடுத்தே
என்புள் உருகும் அடியாரைத் தொழுது நீங்கி வேறிடத்து
முன்பு போலத் திரைநீக்கி முதல்வர் சாத்தும் பணிகொடுத்து
மின்போல் மறையும் சங்கிலியார் தம்மை விதியால் கண்ணுற்றார்

- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 226)

கண்ட கணத்திலேயே மன்மதனின் அம்புகள் ஒருங்கே பாய்ந்தது போன்றதொரு காதலுணர்வு சுந்தரரின் நெஞ்சில் மேலிடுகின்றது. அக்காதல் வேதனையைத் தாங்க மாட்டாதவராய் அங்கிருந்து நீங்கி, அருகிலிருப்போரிடம் **"இம்மங்கை யார்?"** என்று வினவுகின்றார். அவர்களும், **"இவள் சங்கிலியார் என்னும் கன்னிகை பெருகும் தவச்சிறப்பினால் முக்கண் முதல்வரின் திருவடிப் பணியினை மட்டுமே பேணி நிற்பவள்"** என்று உரைக்கின்றனர். அதனைக் கேட்ட தம்பிரான் தோழர், **"முன்னர் திருக்கயிலையில் இரு மாதரை நோக்கியதால் எய்திய இப்பிறவியில், திருவாரூர்ப் பரவை ஒருத்தியெனில், இவள் மற்றொருவள் போலும்"** என்று எண்ணி வியந்து மருளுகின்றார்.




அருகு நின்றார் விளம்புவார் அவர்தாம் நங்கை சங்கிலியார்
பெருகு தவத்தால் ஈசர்பணி பேணும் கன்னியார்என்ன
இருவரால் இப்பிறவியை எம்பெருமான் அருளால் எய்துவித்தார்
மருவும் பரவை ஒருத்திஇவள் மற்றையவளாம் என மருண்டார்

- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 229)

**"மின்னல் போன்ற சடையை உடைய ஈசனுக்கு ஆளாகிய என்னை வருத்தி, என் ஆருயிரையும் எழில் மலர்களையும் கூட சேர்த்துப் பிணைக்கும் இவளை, கொன்றை மாலை சூடும் அந்த அண்ணலாரிடமே விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்வேன்"** என்று உறுதிகொண்டவராக, சுந்தரர் மீண்டுமொரு முறை திருக்கருவறையை நோக்கி விரைகின்றார்.

மின்னார் சடையார் தமக்காளாம் விதியால் வாழும் எனைவருத்தித்
தன்னார் அருளால் வரும்பேறு தவத்தால் அணையா வகைதடுத்தே
என்னாருயிரும் எழில்மலரும் கூடப் பிணைக்கும் இவள்தன்னைப்
பொன்னார் இதழி முடியார்பால் பெறுவேன் என்று போய்ப் புக்கார்

- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 230)

இவ்வாறு, சங்கிலியாரின் மலர் வழிபாடும், சுந்தரரின் தூய பத்தியும் காதலும் கலந்த இத்தெய்விகத் திருவிளையாடலைச் சேக்கிழார் பெருமான் மிக நயமாக வடித்துத் தந்துள்ளார்.

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 12ஆம் நூற்றாண்டு வரலாற்றுடன் தொடர்புடைய, பழமையும் பெருமையும் வாய்க்கப்பெற்ற முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம்



இலங்கைத்திருநாட்டில்சைவநெறிதழைத்தோங்கியமைக்கு அடிநாதமாக விளங்குவது சைவத்திருக்கோயில்களும் அவற்றின் வழிபாடும், பண்பாட்டு மரபுகளின் நீட்சியும் தான். அந்த வகையில் பழமையும் பெருமையும் வாய்க்கப்பெற்ற சிவாலயங்களுள் மூலவரே தான்தோன்றியாகத் தோன்றி அருள் சுரக்கும் கோயில்கள் ஈழத்தில் இரண்டு காணப்படு கின்றன. அவற்றுள் கிழக்கின் காசி என்று புகழப்படும் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் உறையும் தான் தோன்றீச்சரம் மற்றையது வடக்கின் காசி என்று புகழப்படும் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம். இவ்விரு கோயில்களுக்குமிடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. அவை சித்தர்கள் கும்பிட்ட இலிங்கமே பின்னாளில் மரத்தின் அடிப்பாகத்திலிருந்து தான்தோன்றியாக வெளிப்பட்டது என்பர். கோயில் உற்பத்தியான காலம் முதல் இன்றுவரை இயற்கைச் சீற்றங்களாலோ, அண்டை நாட்டவர்களின் படையெடுப்பாலும் அழிநிலைக்குட்படாது நிலைத்து நிற்கின்றது. மற்றும் குளக்கோட்டரசனால் சீர்வரிசையும், மானியங்களும் கொடையாகப் பெற்ற கோயில்களாகவும் விளங்கியுள்ளது.




சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு


### மூர்த்தியின் சிறப்பு

மூர்த்தி சுயம்புலிங்கமாக அமைந்துள்ளது. எவர் துணையின்றியும் யாராலும் உருவாக்காமல் சுயமாகவே தோன்றிய இலிங்கத்தினை சுயம்புலிங்கம் என்று கூறுவர். இத்தகைய இலிங்கங்கள் அரிதானவை, அற்புதமானவை, எளிமையானவை. வழிபடும் பத்தனை இலகுவாக ஈர்க்கக்கூடிய அருளாற்றல் கொண்டவை. ஆகமம் கூறும் வடிவமைப்பு அற்றது. இச் சிவாலயத்தில் சுயம்பாக எழுந்தருளியுள்ள சுயம்புலிங்கமும் அத்தகைய சிறப்புக்களைக் கொண்டது.

சுயம்பாகத் தோன்றியுள்ள இலிங்கத்திற்கு ஆவுடையார் பாகம் அமைவதில்லை. இவ்வாலய நிர்வாக சபையினர் முன்பொரு காலத்தில் இந்திய சிற்பிகளை வரவழைத்து ஆவுடையார் பாகத்தை கருங்கல்லில் பொழிந்து, இலிங்கத்துடன் பொருத்த தீர்மானித்தனர். என்ன அற்புதம், இப்பணிக்கு இறைவனின் சித்தம் மாறாகவே இருந்தது. அங்குள்ள நிர்வாகத் தலைவரின் கனவில் தோன்றிய இறைவன் "தனக்கு ஆவுடையார் தேவை இல்லையென்றும், தோன்றிய வடிவிலேயே விடுக, தனக்கு மூடுவதற்கு ஆக்கப்பட்ட பொற்கவசமும் தேவை இல்லையென்றும்" கூறிவிட்டார். இதனால் அப்போது எப்படி இயற்கையாக இறைவன் தோன்றிய உருவை இப்பொழுதும் கண்டு பேரானந்தம் அடையும் நிலையை அவதானிக்க முடிகின்றது.

### திருத்தல தலவரலாறு

இச் சிவத்தலம் தோன்றிய காலத்தை எவராலும் கூற முடியாதுள்ளது. தற்போது கிடைக்கின்ற கர்ண பரம்பரைக் கதைகளையும், யாழ்ப்பாண வைபவமாலை எனும் வரலாற்று நூலையும், உள்ளூர்ப் புலவர்களால் பாடப்பட்ட பல்வகைப்பட்ட இலக்கிய வடிவங்களையும் ஆதாரமாகக் கொண்டு, ஈழத்தை சோழர் அரசாட்சி புரிந்த காலத்தில் குறிப்பாக கி.பி. 12 ஆம், 13ஆம் நூற்றாண்டில் இவ்வாலயம் தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இக்கோயிலில் உற்பத்தி தொடர்பாக இரண்டு கர்ணபரம்பரைக் கதைகள் இப்பிரதேச மக்களிடையே ஊடாட்டம் பெற்றுள்ளது.

### கர்ண பரம்பரைக் கதை 01

**"சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு மூன்று சித்தர்கள் வன்னிப் பிரதேசத்திற்க வருகை தந்திருந்தனர். இவர்கள் மூவரும் தற்போது ஒட்டுசுட்டான் எனப்படும் ஊரிலிருந்து பிரிந்து முதலாவது சித்தர் ஒட்டுசுட்டானுக்குத் தென்மேற்கு இரண்டு மைல் தொலைவில் உள்ள வாவெட்டிமலையில் தியானத்திலிருந்து சமாதியடைந்தார். இரண்டாவது சித்தர் ஒட்டுசுட்டானுக்குத் தெற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ள காதலியார் சம்மளங்குளத்தில் சமாதியடைந்தார். மூன்றாவது சித்தர் ஒட்டுசுட்டானில் ஒரு கொன்றை மரத்தின் கீழ் சமாதியடைந்தார்."** இவர் அவ்விடத்தில் பூசித்த சிவலிங் கமே பின்னாளில் சுயம்புலிங்கமாக வெளிவந்தது என்பர்.



## கர்ண பரம்பரைக் கதை 11

**"யாழ்ப்பாணம் இடைக்காட்டைச் சேர்ந்த வீரபத்திரர் என்னும் சைவ வேளாளரும் அவருடைய இரண்டு பிள்ளைகளும் வன்னிக்குச் சென்று குடியேறினர். இவ்வாறு அவர் குடும்பமும் அவரின் உறவுகளும் வாழ்ந்த இடம் ஒட்டுசுட்டானில் இடைக்காடு எனக் கூறப்படுகின்றது. வீரபத்திரர் காடுவெட்டி குரக்கன் பயிரிட்டார். குரக்கன் அறுவடை முடிந்த பின் குரக்கன் ஓலைகளை வெட்டி கொன்றை மரத்தடியில் நெருப்பு வைத்து எரிக்க, கொன்றை மரத்தடியில் இருந்த ஓலைகள் மட்டும் எரியாமல் இருந்தது. அதை மண்வெட்டியால் அகற்ற வெட்டிய போது அங்கு உதிரம் கசிவதைக் கண்டு திகைத்து நின்றார். பின் இந் நிகழ்வின் மர்மத்தை அப்பகுதியை அரசாட்சி புரிந்த வன்னியனிடம் கூறினார். வன்னியனும் அவ்விடத்தைப் பார்வையிட்டு அவ்விடத்தில் ஓர் கோயில் அமைத்து வழிபாடு புரியுமாறு பணித்தார். அவரின் பணிப்பின் "கொன்றைப் பிள்ளையார்" எனும் பெயரில் சிறிய கோயிலொன்று அமைக்கப்பட்டு பின் அவ்விடத்தில் பெருமானார் சுயம்பாகத் தோன்றி காட்சியளித்ததைத் தொடர்ந்து தான்தோன்றியீச்சரர் என திருப்பெயர் பெற்றார்."** எரியாது இடத்தில் இருந்து சுயம்பாக எழும்பியதனால் **"வேகாவனேசுவரர்"** என்றும், **"வேகாவனப் பெருமான்"** என்றும் சுயம்பு மூர்த்தி போற்றப்பட்டார்.

## திருத்தல அமைவிடமும் அமைப்பும்

இலங்கையின் வன்னி நிலப்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்திலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பழம்பெரும்பதியான ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள சிவாலயமாகும். இங்குள்ள மூர்த்தி பூலோகநாயகியுடன் உடனுறையும் வேகாவனமுடையார். கோயில்மரம் – கொன்றை மரம், தீர்த்தம் – கோயில் தீர்த்தக் கேணியாகும். இது இயற்கையாய் அமைந்த அற்புதமான கேணியாகும்.

இக் கோயில் 1993-11-10 இல் முழுமை பெற்றது 1998 இற்கு பின் போர் அனர்த்தத்தால் சற்று பாதிப்புற்றிருந்தது. மீண்டும் 2005-07-13 இல் குடமுழுக்கு இடம்பெற்றது. தற்போது புத்தெழில் கோலத்தில் அமைக்கப்பட்டு, 108 அடி ஒன்பது தள அமைப்புடன் இராசகோபுரமும் அமைக்கப்பட்டு 2023-06-01 குடமுழுக்கு செய்யப்பட்டது.

## பூசை மரபும் திருவிழாவும்

ஆனி மறைமதியில் (அமாவாசை) கொடியேற்றமும், நிறைமதியில் தீர்த்தத் திருவிழாவும், 13ஆம் நாள் வேட்டைத் திருவிழாவும் ஆண்டு தோறும் திருவிழாவாக நடைபெற்று வருகின்றன. இவற்றுள் வேட்டைத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். தீராத நோயால் பீடிக்கப்பட்டவர்கள் தங்கள் நோய் விலக வேட்டைத் திருவிழா அன்று வேடமிட்டு, வருவதாக நேர்த்தி வைத்து, வேடர் வேடம் தாங்கி, சுவாமி வேட்டைக்கு எழுந்தருளிச் செல்லும் போது உலாவாகச் செல்வது மரபாக இருந்து வருகின்றது. வீதி வலம் வரும்போது இறைவி சுவாமியுடன் கோபம் கொண்டு வாயிற் கதவைப் பூட்டிக் கொள்ள அவ்வேளையில் கோயில் மணியக்காரர் அவர்களின் பிணக்கை விசாரித்து தீர்த்து வைக்கும் பாங்கில் ஓர் நாடகம் நிகழ்த்தப்படும். இவ்விடத்தில் வசன கவிதைபோல் உள்ள ஏட்டு நூலொன்று படிக்கப்பட்டு இதன்பின் வேடமிட்ட வேடர்கள் எல்லாம் வீழ்ந்து வணங்கி குளத்தில் நீராடி நேர்த்தியை நிறைவு செய்வர்.

**"வாரீர் வாரீர் ஆலகால சுந்தரரே
ஆதி சண்டீதரரே உங்கள் பரமேஸ்வரனாவார்
திரு வேட்டைக் கெழுந்தருழுகின்றோமென்று
காட்டினமாகப் போய் கெங்கா பரமேஸ்வரியுடனே
தேவரும் பாடியும் மீண்டும்
சுத்தமானவரைப் போல் இங்கே வரக் கடவுளாவார்"
- (வேட்டை வசனக்கவி)**

மற்றும் வழமை போல் சிவனிரவு, திருவாதிரை, கழுவாய்,



விரத வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பெருந்திருவிழா ஆனி மறைமதியில் ஆரம்பித்து 16 நாட்கள் நடைபெறும்.

## கோயில் இலக்கியம்

இக்கோயில் மீது பல்வேறு புலவர்கள் பல சிற்றிலக்கியங்களைப் பாடிப் பரவியுள்ளனர். ச. சபாரத்தின முதலியார் ஒட்டுசுட்டான் சிவன் ஊஞ்சற்பதிகம், 1883 இல் இயற்றப்பட்டு சுதுமலையைச் சேர்ந்த பண்டிதர் ஆ. சி. நாகலிங்கம் என்பவரால் அவ் இலக்கியம் பாடப்பட்டு வருகின்றது. அதேபோல் முருகேசு ஆசிரியர் வே. சுப்பிரமணியம் ஆகியோர் பாடிய தான்தோன்றீச்சர பாமாலையும் இவ் ஈசனின் அருளைப் பறைசாற்றும் இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

**மாப்பினை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிளை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே
- (திருநாவுக்கரசர் அருளியது)**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின்

# ஆறாம் ஆண்டு நிறைவும் ஐம்பூதநாதர் சங்குநீராட்டும்



பஃறுளி ஆற்றுடன், பன்மலை அடுக்குடன், முதற் சங்கம் கண்ட தென்புலத்தார் நினைவாக, ஆதித்தமிழர்கள் வாழ்ந்த தென்னாட்டில், உலகில் வேறெங்கும் காணாத வகையில், ஐம்பூதங்களுக்கும் சேர்த்து ஒரு தலக்கோயிலாக தென்னாட்டில், சிவபூமி என்றழைக்கப்பெறும் இலங்கை யாழ்ப்பாண மாநகரில் கொக்குவில் 'தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்' அமைகிறது.

அங்கே ஐம்பூதநாதர் அருட்கோலம் கொண்டு எழுந்தருளு கிறார், எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடு டைய சிவன், இப் புத்தெழில் கோலத்தில் புத்தெழுச்சி பெற்று செந்தமிழ் ஆகம சிவமடம் என்ற பெயரில் அப்பெயரிற் கேற்றால் போல் செந்தமிழ் ஆகம முறைப்படி செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் ஆற்றிட ஐம்பூதநாதருக்கு வீறியெழல் (சார்வரி) ஆண்டு விடைத் திங்கள் (வைகாசி) 21 ஆம் நாள் (03-06-2020) புதனன்று விளக்கு (சுவாதி) நாண்மீன், பதின்மும்மைப் பிறைநாள் (திரயோதசி திதி – மூன்றாம் வளர்பிறை) அமுத ஓகம் காலை 9 மணிக்குமேல் 10 மணிக்குள்ளாக விடை வான் வேளையில் வெள்ளி நல்லோரையில் கடவுள் மங்கல நன்னீராட்டு நடைபெற்று, தென்னாட்டின் சிவப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு தொடங்கி இன்று வரை தன்னிலைமாறாது செந்தமிழில், நிறைமதி, மறைமதி வழிபாடுகள், கழுவாய் வழிபாடுகள், குருபூசைகள், சிவமங்கல நீராட்டுகள், திருக்குட நன்னீராட்டுகள், வாழ்வியல் சடங்குகள் என்பவற்றை நடாத்தி வருகின்றது. அந்தவகையில், அருள்மிகு மனோன் மணியம்மை உடனுறை ஐம்பூதநாதப் பெருமான் திரு நிலைப்படுத்தப்பட்டு, ஆறு ஆண்டு நிறைவாகி உள்ள நிலையில், கடந்த வைகாசித் திங்கள் பதினைந்தாம் நாள் (29-05-2026) அன்று ஐம்பூதநாதப் பெருமானுக்கு சங்கு நீராட்டு வழிபாடுகள் மிகவும் சிறப்பாக இறையருளோடு நடந்தேறியுள்ளது.

**பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி**

**அருக்கனில் சோதி அமைத்தாய் போற்றி**
**வெண்மதி தண்ணொளி தந்தாய் போற்றி**
**உயிருக்குள் உயிராய் நின்றாய் போற்றி**
**ஆதியும் அந்தமும் இல்லாய் போற்றி**
**ஐம்பூதநாதரே போற்றி போற்றி**

### 2023, 2024, 2025, 2026 ஆம் ஆண்டுகளுக்கான தென்னாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு
**(34 வது திங்கள் இதழின் தொடர்ச்சி)**

#### 2023ஆம் ஆண்டு இறுதி நிகழ்வுகள்

- 27-11-2023: தென்னாடு திங்கள் இதழின் முப்பத்தொன்பதாவது (39) இதழ் வெளியீடு.
- 03-12-2023: கொக்குவில் இந்துக் கல்லூரி அண்ணாமலையார் திருக்கோயில் கடவுள் மங்கல சங்கு நீராட்டு சிறப்பாக நடைபெற்றது.
- 16-12-2023: இலங்கை சைவநெறிக் கழகத்தின் "சைவம் போற்றுதும்" விழாவிற்காக இலங்கைக்கு வருகை தந்திருந்த, "சுத்த சைவம்" நூலின் ஆசிரியர் சிவத்திரு. செ. முருகவேள் ஐயா மற்றும் அவரது நண்பர்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்திற்கு



வருகை தந்து சிறப்பித்தனர்.
- 17-12-2023: திருகோணமலை சம்பூர் வாழ் அடியார் பெருமக்கள் யாழ்ப்பாணத்திற்குத் திருத்தலப்பயணம் மேற்கொண்டிருந்த வேளை, தென்னாடு சிவமடத்திற்கு வருகை தந்து சிவபுராணம் பாடி வழிபாடு ஆற்றி னார்கள்.
- 18-12-2023: தென்னாடு சிவமடத்தின் சைவ மாணவர் சபையினருக்கும், வடமாகாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட இந்து சமய பாட ஆசிரிய ஆலோச கர்கள் மற்றும் இந்து சமய பாட இணைப்பாளர்களுக்கும்

இடையேயான கலந்துரையாடல் யாழ் வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது.

- 24-12-2023: தென்னாடு திங்கள் இதழின் நாற்பதாவது (40) இதழ் வெளியீடு.
- 25-12-2023 (மார்கழிப் பெருவிழா - 2023): தென்னாடு சைவ மாணவர் சபையின் 2023ஆம் ஆண்டிற்கான மார்கழிப் பெருவிழா, யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் இரண்டு அரங்கங்களாக நடைபெற்றது. யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை மங்களநாதர் திருக்கோயில் வழிபாட்டுடன் தொடங்கி, யானைகள் மீது நால்வர் பெருமக்களுடன் திருமுறைகள் திருவீதி




உலா வந்தமை விழாவின் சிறப்பம்சமாகும்.

- பங்கேற்ற பெரியோர்கள்: யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை தலைவர், தவத்திரு. வேலன் சுவாமிகள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் லலீசன் ஐயா, வலம்புரி பத்திரிகை முதன்மை ஆசிரியர் விஜயசுந்தரம் ஐயா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். தமிழ்நாட்டிலிருந்து அரன்பணி அறக்கட்டளையின் தலைவர் பவானி அ. தியாகராசன் ஐயா மற்றும் அவரது அடியார் திருக்கூட்டத்தினர் 10 பேரும், ஓய்வுநிலை போதனாசிரியர் விநாயகமூர்த்தி ஐயாவும் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினர். இதில் பல மாவட்ட அடியார்கள் கலந்து கொண்டனர்.
- 27-12-2023: திருவாதிரை அருள்வழிபாடும் தில்லைக்கூத்தன் திருவீதியுலாவும் பத்திப்பூர்வமாக இடம்பெற்றது.

### 2024ஆம் ஆண்டு நிகழ்வுகள்

- 15-01-2024 ரூ 16-01-2024: தைப் பொங்கல் மற்றும் மாட்டுப்பொங்கல் சிறப்பு வழிபாடுகள் கோலாகலமாக இடம்பெற்றன.
- 24-01-2024: அருள்மிகு நயினை நாகபூசணி அம்மன் குடமுழுக்கில் கலந்து கொள்ள, தென்னாட்டின் ஏற்பாட்டில் இலங்கை வருகை தந்திருந்த செங்கோல் ஆதீனம் 103வது சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக சத்திஞான பரமச்சாரிய சுவாமிகள் தென்னாடு மடத்திற்கு வருகை தந்தார்.
- 25-01-2024: தென்னாடு திங்கள் இதழின் நாற்பத்தொன்றாவது (41) இதழ் வெளியீடு.
- 05-02-2024: 'தென்னாடு தபால் இதழ்' வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, முதற்கட்டமாக 170 பாடசாலைகளுக்கு இதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது.
- 23-02-2024: தென்னாடு திங்கள் இதழின் நாற்பத்திரண்டாவது (42) இதழ் வெளியீடு.
- 07-03-2024: பெருஞ்சிவனிரவை (மகாசிவராத்திரி) முன்னிட்டு சைவ மாணவர் சபையினரால் வடக்கிலுள்ள பாடசாலைத் திருக்கோயில்களுக்குப் பூசைப் பொருட்கள் வழங்கப்பட்டன.
- 08-03-2024 (பெருஞ்சிவனிரவு - 2024): தென்னாட்டில் நான்கு சாமமும் நால்வகைத் திருமஞ்சனத்துடன் பூசைகள் சிறப்பாக இடம்பெற்று அதிகாலை அமுது வழங்கப்பட்டது. யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் திருக்கோயில்களிலும் மாணவர் கலை நிகழ்வுகளுடன் வழிபாடுகள் நடைபெற்றன.
- 16-03-2024 & 17-03-2024: ICBT தனியார் பல்கலைக்கழகத்தில் கல்வி மற்றும் தொழில் விருத்தி வேண்டி சாந்தி வேள்வியை ஒளியகம் ஒளியரசு ஐயா ஆற்றி வைத்தார். மறுநாள் அவராலேயே 3 மாணவர்களுக்குச் சமய தீக்கை (நுழைவு தீக்கை) வழங்கி வைக்கப்பட்டது.
- 21-03-2024: யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மங்களநாதர் திருக்கோயிலில் இரண்டாம் ஆண்டு சங்கு நீராட்டு சிறப்பாக ஆற்றி வைக்கப்பட்டது.
- 24-03-2024: கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை தாயுமானவர் சுவாமி திருக்கோயிலில் முதலாம் ஆண்டு சங்கு நீராட்டு ஆற்றி வைக்கப்பட்டதுடன், அன்றைய தினமே தென்னாடு திங்கள் இதழின் நாற்பத்துமூன்றாவது (43) இதழும் வெளியிடப்பட்டது.
- 18-04-2024: மடத்தில் இரண்டு வருடங்கள் அர்ச்சகராகப் பணியாற்றிய தினகரன் ஐயா அவர்களுக்குக் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.
- 19-04-2024: சிவமடம் அமையப் பெற்றுள்ள 'தனலட்சுமி வாசா' இல்லத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய "ஊரும் உறவும் எனது வாழ்வும்" நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.
- 24-04-2024: தென்னாடு திங்கள் இதழின் நாற்பத்துநான்காவது (44) இதழ் வெளியீடு.

(தொடரும்...)

திருச்சிற்றம்பலம்

**தொகுப்பு: தென்னாடு நிலவன்**

# சிவனடியார்களின் துணிகளை சலவை செய்து கொடுப்பதை தலையாயத் தொண்டாக புரிந்து வந்த திருக்குறிப்புத் தொண்ட நாயனார்








சிவத்திருமதி.
நவிசா சுஜிந்தன்
ஆய்வு மாணவர்,
முதுதத்துவமாணி

செய்யும் தொழிலிலும் இறையடியார்களுக்கு தொண்டு செய்யலாம் என்று எடுத்துக்காட்டிய இவரை, சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில் "**திருக்குறிப்புத் தொண்டர் தம் அடியார்க்கும் அடியேன்**" என்று போற்றுகிறார்.

இவர் உமையம்மையால் பூசை செய்த சிறப்புப்பெற்ற தொண்டை நன்னாட்டில் காஞ்சி மாநகரத்தில் ஏகாலியர் குலத்தில் தோன்றியவர். சிவபெருமான் மீது இடையறா அன்பும், அன்பின் வழியது சைவ ஒழுக்கம் உடையவராகவும், விளங்கினார். இவர் மனதிலே இறைவனையும், இறையடியாரையும் வழிபடுவதோடு, வாக்கிலே ஐந்தெழுத்து ஓதி, இறையடியாரை புகழைப் போற்றியும் வாழ்ந்தார். இவர் சிவனடியார்களுக்கு தொண்டு செய்வதற்கு பணம், பதவி, புகழ் ஏதும் தேவையில்லை உடலுழைப்பு போதும் என உணர்ந்த திருக்குறிப்புத் தொண்ட நாயனார் உண்மையான தொண்டுள்ளத்தோடு தம்முடைய உடலுழைப்பினைக் கொண்டு சிவனடியார்களுக்கு தொண்டு புரிந்து வந்தார்.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் தம்முடைய குலத் தொழிலைச் செய்வதோடு, சிவனடியார்களின் துணிகளை அன்போடு சலவை செய்து அளிப்பதைத் தன்னுடைய தொண்டாகக் கொண்டு அதில் இன்பம் கண்டார். பிறருடைய ஆடைகளின் அழுக்கினை நீக்கும் தொழிலைச் செய்ததாலும், சிவபெருமானை தன்னுடைய நினைவில் கொண்டு மனமாசு நீங்கி வாழ்ந்தார். சிவனடியார்களின் உள்ளத்தின் திருக்குறிப்பை உணர்ந்து அவர்களுக்குப் பணி விடை செய்யும் தன்மையில் நிலைத்த மேன்மையால் இவருக்கு "**திருக் குறிப்புத் தொண்டர்**" என்று வழங்கப்படும் சிறப்புப் பெயரை உடையவரானார்.

இவர் நல் ஒழுக்க நெறி நிற்பவர், சிவனடித்தொண்டு புரிபவர், மன, மொழி, மெய்யடியாகிய முக்கரணங்களும் அண்ணலார் சேவடியின் சார்பாக அணைவிப்பவர். இவர் சிவனடியார்களின் குறிப்பு அறிந்து, அவர்களின் அழுக்கு ஆடைகளை துவைத்து சலவை செய்யும் திருப்பணியை நேர்மையோடும், சிவபத்தியோடும் செய்து வந்தார், அடியார்களின் ஆடைகளின் மாசு நீக்குவது போல, தனது ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்றும் நீங்கும் என்ற எண்ணத்தில் அப்பணியை சிறந்த தெய்வப் பணி என்று

சிரத்தையுடன் செய்து வந்தார்.

இவ்வடியவரது அன்பின் பெருமையையும், தொண்டுள்ளத்தை உலகத்தார்க்கு அறிவிக்கத் திருவுளங்கொண்டார் திருஏகம்பப்பெருமான். குளிர் மிகுந்த ஒருநாள் திருமாலும் காணமுடியாத திருவடிகளை மண்மீது பதித்து வயதான சிவனடியாராக, மெலிந்த மேனியும், வெண்ணீற்று மேனியில் அழுக்கடைந்த கரிய கந்தைத் துணியுமாய்க் குறுகிய நடையுடன் அடியாரின் வீட்டிற்கு வந்தார். தளர்ந்த திருமேனியுடைய சிவனடியாராகிய அவரைக் காலை வேளையில் கண்டதும் திருக்குறிப்புத் தொண்ட நாயனாருக்கு அன்பு பெருகியது. அவரைக் கண்டவுடன் அவர் திருவடிகளில் வீழ்ந்து பணிந்தார். எழுந்து நின்று இன்மொழிகள் பல கூறினார்.

**"திருமேனி இழைத்திருக்கின்றதே, ஏன்?"** என இரக்கத்துடன் கேட்டார். பின்னர் கூப்பிய கைகளுடன், **'தாங்கள் உடுத்துள்ள இக்கந்தையைத் துவைத்தற்குத் தாருங்கள்'** என்று கேட்டார். இதனை சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில்,

**திருமேனி வெண் நீறு திகழ்ந்து ஒளிரும் கோலத்துக்**
**கரு மேகம் என அழுக்குக் கந்தையுடன் எழுந்து அருளி**
**வரும்மேனி அருந் தவரைக் கண்டு மனம் மகிழ்ந்து எதிர் கொண்டு**
**உருமேவும் மயிர்ப் புளகம் உள ஆகப் பணிந்து எழுந்தார்**
**- (திருத்தொண்டர் புராணம் 12:25:117)**

என மிக அழகாக எடுத்தியம்பியுள்ளார்.

அதனைப் பெற்றுக்கொண்ட திருக்குறிப்புத் தொண்டர், குளத்திற் சென்று, முன் சிறிது அழுக்கைப் போக்கி, துவைக்கத் தொடங்கினார். அப்பொழுது பெருமழை விடாது பெய்வதாயிற்று. அதுகண்ட திருக்குறிப்புத் தொண்டர் சிவனடியார்க்குத் தாம் சொன்ன உறுதிமொழியை எண்ணி, 'இனி நான் யாது செய்வேன்' என்று கவலையுற்று, மழைவிடுவதை எதிர்பார்த்து அங்கேயே நின்றார். மழையோ நிற்கவில்லை. இரவுப் பொழுதும் நெருங்குவதாயிற்று. திருக்குறிப்புத் தொண்டர் **"ஐயோ குளிரால் திருமேனி நடுங்குகின்ற சிவனடியார்க்கு நான் செய்ய விரும்பிய பணி தவறிப்போயிற்றே"** என்று சோர்ந்து வீழ்ந்தார் மழையோ விடவில்லை அடியார் சொல்லிய கால எல்லையும் முடிந்து விட்டது.

முன்னமே அவரது உடையினை வீட்டிலேயே துவைத்துக் காற்றில் உலர்த்திக் கொடுப்பதற்கு அறியாது போயினேனே் அடியார் திருமேனி குளிரால் வருந்தத் தீங்கு புரிந்த கொடியேனுக்கு இனி 'இதுவே செயல்' என்று எழுந்து, 'துணி துவைக்கும் கற்பாறையிலே எனது தலை சிந்தும்படி மோதுவேன்' என்று தமது தலையை மோத சென்ற அந்தப் பத்தனின் உள்ளக்கிடக்கையை சேக்கிழார்,

**கந்தை புடைத்திட எற்றும் கல்பாறை மிசைத் தலையைச்**
**சிந்த எடுத்து எற்றுவன் என்று அணைந்து செழும் பாறை மிசைத்**
**தன் தலையைப் புடைத்து எற்ற அப்பாறை தன் மருங்கு**
**வந்து எழுந்து பிடித்தது அணி வளைத் தழும்பர் மலர்ச் செங்கை**
**- (திருத்தொண்டர் புராணம் 12:25:125)**

என எடுத்தியம்பியுள்ளார்.

அச்சந்தர்ப்பத்தில் அந்தப் பாறையில் இருந்து ஒரு கை தோன்றி அடியாருடைய தலையைப் பிடித்தது. அப்பொழுது வானத்தில் விடாது பெய்த நீர்மழை நீங்க மலர்மழை பொழிந்தது. உமையொருபாகராய் இறைவன் விடைமேல் எழுந்தருளி, காட்சி கொடுத்தருளினார். அத்தெய்வக் காட்சியினைக் கண்ட திருக்குறிப்புத் தொண்டர், அன்புருகக் கைதொழுது, மகிழ்ச்சியில் தரையில் விழுந்து வணங்கி பெருமகிழ்ச்சியுற்றார். சிவபெருமான் அவரை நோக்கி, **"உனது அன்பின் திறத்தை 'மூவுலகத்தாருக்கும் அறியச் செய்தோம்', இனி நீ நம்முடைய உலகத்தை அடைந்து நம்மைப் பிரியாது உறைவாயாக"** என்று திருவருள் புரிந்து மறைந்தருளினார். இந்த அருட்காட்சியை சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில்,

**முன் அவரை நேர் நோக்கி முக் கண்ணர் மூவுலகும்**
**நின் நிலைமை அறிவித்தோம் நீயும் இனி நீடிய நம்**
**மன் உலகு பிரியாது வைகுவாய் என அருளி**
**அந் நிலையே எழுந்து அருளி அணி ஏகாம்பரம் அணைந்தார்**
**- (திருத்தொண்டர் புராணம் 12:25:127)**

என எடுத்தியம்பியுள்ளார். இவ்வாறு திருக்குறிப்புத் தொண்ட நாயனார் பல காலம் உலகில் வாழ்ந்து, சிவனடியார்களின் உள்ளத்தின் திருக்குறிப்பை உணர்ந்து அவர்களுக்கு திருத்தொண்டுகள் பல செய்து சித்திரை விளக்கு (சுவாதி) விண்மீனில் சிவபதத்தில் மூழ்கி இன்புற்று இருந்தார்.

**திருச்சிற்றம்பலம்**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**திருநகரச் சிறப்பு:- பாடல் 45**

**தண்ணளிவென் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது**
**மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைபொழிந்தார்**
**அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்**
**விண்ணவர்கள் தொழுகின்றான் வீதிவிடங்கப் பெருமான்**

**பொருள்:-** மிகுந்த கருணை பொருந்திய வெண்கொற்றக் குடையினையுடைய மனு அரசனது செயற்கரிய செயலைக் கண்டு ஆற்றமாற்றாதவர்களாய் மண்ணுலகத்தவர்களாகிய மக்கள் கண்ணீரை மழையாகப் பொழிந்தார்கள். விண்ணுலகத்தவர்களாகிய தேவர்கள் புதிய கற்பகப் பூ மழை சொரிந்தார்கள். மிகப் பெருமையுடையானாகிய அவ்வரசன் கண்முன்னே காட்சி கொடுத்துத் தேவர்கள் தொழும்படியாக எழுந்தருளி நின்றார் வீதிவிடங்கப் பெருமானாகிய தியாகேசர்.



சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்



பவானி சிவ
அ.வேலுச்சாமி

**வி.உரை:-** தண்ணளி – தடைபடாது எல்லா உயிர்களிடத்தும் செல்லும் குளிர்ந்த கருணை. **"எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்"** என்றார் நாயனார். இஃது அரச தண்டனையோடு அடியார் விதித்த தண்டனையுமாம் இவ்வரசர் பேரடியார் என்பது அவர் சிவாலயங்களுக்கு ஆகமவிதி வழி நிபந்தம் ஆராய்ந்து, அவற்றின் வழியே தானும் பூசித்து வந்தமையாலும் தியாகேசர் எழுந்தருளிய திருவாரூரிலே பிறந்த உயிரைக் கொன்றது பெரும் பாவம் என்று உணர்ந்தமையாலும் காணலாம். இவர், இறைவனை நீதிவடிவுடையவராகக் கொண்டு அவனது நீதியினையே வணங்கி உறுதியை அடைந்தவர். இறைவனுக்குரிய திருவடிவங்களிலே மிகச் சிறந்தது நீதியின் வடிவமே என்பது பெறப்படும்.

அடியார்கள் விதிக்கும் தண்டனையும் பெரும் நிவர்த்தியாகி உயிரைச் சுத்தமாக்கும் என்பது, சண்டேசுர நாயனார் விதித்த தண்டனையால் அவரின் தந்தை எச்சத்தன், கழுவாயில்லாத சிவாபராதமாகிய பெரும் பாதகத்தினின்றும் நீங்கிச் சிவலோகம் அடைந்தமையைக் காணலாம்.

**"ஞாலம் அறியப் பிழைபுரிந்து நம்பர்அருளால் நான்மறையின்**
**சீலம் திகழும் சேய்ஞலூர்ப் பிள்ளையார்தம் திருக்கையில்**
**கோல மழுவால் ஏறுண்டு குற்ற நீங்கிச் சுற்றமுடன்**
**மூல முதல்வர் சிவலோகம் எய்தப் பெற்றான் மறைமறையோன்"**
**(சண்டேசுர புராணம்)**

**அண்ணல்** - பெருமை உடையவன் அவன் செய்த செயற்களும் செய்கையின் பெருமை குறித்தது.

**மழவிடை - மழ** – என்றைக்கும் இளமையாய் இருப்பது.

**விடை** - அறக்கடவுள் **"தருமந் தன் வழிச்செல்கை கடனென்று"**

சிவபெருமான் விடையின்மேல் வந்தார் என்பது தருமந் தாபனமாகிய காரியத்தில் வெளிப்படுகின்றவர் என்பது கருத்து.

**விண்ணவர்கள் தொழ** - முன்னர்த் தங்கள் தேவ உலகத்தில் வைத்து வணங்கிய மூர்த்தியை பலநாள் பிரிந்த பின்னர் இன்று வீதியில் வெளிப்படக் கண்டாராதலின் விண்ணவர்கள் மகிழ்ந்து முன்னர் தொழுதனர்.

தொழுகின்றான் வீதி விடங்கப் பெருமான் – அரசன் தன் மகனுடைய மருமத்தில் தேராழி உறஊர்ந்த செயலும், இறைவன் விடைமேல் நின்ற செயலும், ஒருங்கே நிகழ்ந்தன என்பார். "உறஊர்ந்தான்" என்றும் அதை அடுத்து "தொழுகின்றான்" என்றும் கூறினார்.

**பாடல் :- 46**

**சடைமருங்கில் இளம்பிறையும் தனிவிழிக்குத் திருநுதலும்**
**இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்**
**புடைநெருங்கும் பெருமையும்முன் கண்டுஅரசன் போற்றிசைப்ப**
**விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற்கு அருள்கொடுத்தான்**

**பொருள்:-** சடையின் ஒருபக்கத்து இளம்பிறையும், தனித்து விழிக்கும் இயல்புடைய திருநெற்றியும், இடப்பக்கத்திலே உமையம்மையாரும், எப்பக்கமும் சூழ்ந்த பெருமைப் பூதகணங்களும் ஆக இக்காட்சியை இறைவன் காட்ட அரசர் கண்டு துதித்து நிற்க, விடைப்பாகராய் எழுந்தருளிய வீதிவிடங்கப்பெருமான் வல்லமையுடைய அவ்வரசனுக்குத் தமது நிறைந்த அருளைக் கொடுத்தனர்.

**வி. உரை:- சடை** - சிவபெருமானுக்கே உரிய சிறப்பு அடையாளமாம். அதுபற்றிச் சைவத்திற்கே சிறப்பாயுள்ள அடையாளமுமாம். இதனாலே சடையான் என்பது சிவபெருமானுக்குரிய சிறப்புப் பெயராயிற்று. சடை–விடை என்பன இறைவனது இலக்கணத்தை விளக்குவன. சடைக்கு இறைவன் ஆதாரமாயும் விடைக்கு ஆதேயமாயும் விளக்குதலால் இறைவன் ஒருவனே உலகுக்கு ஆதார ஆதேயம் இரண்டும் ஆவன் என்று திரு. பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் அவர்கள் விளக்கியதாக சிவக்கவிமணி ஐயா அவர்கள் கூறியுள்ளார்கள்.

**இளம்பிறை** - நிலவைச் சடையின்மீது உலாவவைத்த வரலாறு இறைவனது பெரும் கருணையைக் காட்டும் அடையாளமாம். அன்றியும் இருள் உலகமாகிய அலைகடலிலே கரை இருக்கும் இடம் காட்டி அழைக்கும் உயர்ந்த கலங்கரை விளக்கமுமாம். இதுவே முதலில் கண்ணுக்குப் புலனாவது. **"பித்தா பிறைசூடி"** என்று நம்பிகளும் **"ஓர் தூவெண்மதிசூடி"** என்று பிள்ளையாரும், திருவருள் பெற்ற தொடக்கத்திலே விளக்கம் பெற எடுத்துக் கூறிய அருள்வாக்குகளை காணலாம். அப்பர் சாமிகள் கயிலைக் காட்சியை திருவையாற்றில் கண்டபோது **"மாதர்பிறைக் கண்ணியானை", "போழிளங்கண்ணியானை"** என்று ஒவ்வொரு திருப்பாடலிலும் தொடக்கத்தில் இவ் இளம்பிறையை வைத்து அருளியிருப்பதைக் காணலாம். **"தெண்ணிலா மலர்ந்த வேணியாய்"** என்று தடுத்தாட்கொண்ட புராணத்தில் நம்பிகள் கண்ட காட்சியினை தெய்வச் சேக்கிழார் பெருமான் அழகுற எடுத்தியம்பி உள்ளார்கள்.

**தனி விழிக்குத் திருநுதலும்** - தனி விழியினையுடைய திருநெற்றி வேண்டும்போது விழித்து பிறநேரம் விழியாமை. இரண்டு சுடர்களாகிய ஏனைய விழிகளாகிய சூரிய சந்திரர்கள் என்றைக்கும் இமையால் விழிப்பன இந்த நுதற்கண்ணோ அவ்வாறன்றி ஒவ்வொர் காலங்களில் ஆக்கல், அழித்தல், அருளல் முதலிய காரணம் பற்றி விழிப்பது இதனை தீக்கண் என்பர். அம்பிகை ஒரு காலத்து இறைவனது இரண்டு கண்களையும் மூடியபோது எங்கும் இருள் மூடிவிட, உலகத்திற்கு ஒளி தந்தருளும் பொருட்டு இக் கண்ணைத் திறந்தனர் என்பது சரிதம்.

**"செற்றங் கனங்களைத் தீவிழித்தான் தில்லைச் சிற்றம்பலவன்**
**நெற்றியில் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே"**
**(அப்பர் சுவாமிகள்)**

இவ்விழி தேவர்களின் அனுக்கிரகத்தின் பொருட்டு முருகப் பெருமான் அவதரிக்க விழிக்கப்பெற்றதாம்.

**எம்மருங்கும் பூதகணம்** - இவை எப்பொழுதும் இறைவனைச் சூழப்பெற்று ஆனந்தித் திருப்பன சம்கார காலத்தில் இறைவன் திருநடனத்தை உடனிருந்து அம்மையார் காணும்போது இப்பூதகணங்களும் தரித்து ஆனந்திப்பன என்பது.

**அருள் கொடுத்தான்** - தனது அருளே கண்ணாகக் காணும்படி தன்னையே கொடுத்தான். "தந்தது உன்தன்னை" என்ற திருவாசகக் கூற்றுப்படி காணலாம். அவனருளே கண்ணாக அவன் கொடுத்து அதனால் காணின் அல்லாது இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று காண முடியாது. ஆதலின் கண்டு போற்றிசைக்கும் அருளைக் கொடுத்தார்.

அம்மையாரும் பூதகணமும் தாமுமாக இருக்கக் கண்டு போற்றியும் இருக்கும்படி கொடுப்பதைவிட வேறு அருள் யாது உளது வீதிவிடங்கப்பெருமான் அருள்செய்தது இதுவே.

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்


சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

(சென்ற திங்கள் தொடர்ச்சி)

எனவே, சைவசமயத்தில் பிறப்புடையோர் அனைவரும் உயிர்களே யாகும். உயிர்களும் சிவபெருமானும் ஒன்றுதான் என்பது சைவவிரோதம். வைணவத்தார் பிறப்பை வினைவயப்படுவதென்று துணிந்துகொள்ள முடியாமையினால், அவர்களுக்குப் பிறப்பு இறப்புக்கு உள்ளாகும் இராமன் போன்ற அவதாரங்களும் அவர்களுடைய தெய்வமாகிய திருமாலுக்கும் பேதமின்மை என்பர். அஃது அவர்களுக்கு உவப்பாகவிருக்கலாம். ஆனால், பிறப்பு என்பதனை வினைவயப்படுதலாகக் கூறும் சைவ சமயத்திற்குப் பிறந்தோன் வாழ்ந்தோன் அழுதோன் மயங்கி உழன்றோன் இல்லறம் நடத்திப் பிள்ளைகள் பெற்றோன் பிள்ளைகளையும் மனைவியையும் பிரிந்து வாடினோன் குடும்ப உறுப்பினர்களை இழந்து வருந்தினோன் நதியில் மூழ்கி உயிர் நீத்தோன் என்பான் ஒருபோதும் கடவுளாகமாட்டான்!

**நூறுகோடி பிரமர்கள் நொந்தினர்**
**ஆறுகோடி நாராயணர் அங்ஙனே**
**ஏறுகங்கை மணல் எண்ணில் இந்திரர்**
**ஈறில்லாதவன் ஈசன் ஒருவனே** - திருநாவுக்கரசு நாயனார்

பிரமர்களும் நாராயணர்களும் இந்திரர்களும் எண்ணில்லாதவர்களாகப் பலர் உளர் என்றும், அவர்கள் எல்லோரும் பிறந்து இறக்கும் உயிர்வர்க்கமே என்றும் திருநாவுக்கரசு நாயனார் அருளியிருப்பதே சைவசமயிகள் கொள்ளத்தக்கது. கம்பராமாயணத்தாரின் கருத்தெல்லாம் தள்ளத்தக்கது!

சைவ உண்மை இவ்வாறிருக்கச் சிலர், **"அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே"** என்னும் திருநாவுக்கரசு நாயனார் அருள்வாக்கையும், காரைக்கால் அம்மையார் முதலியோர் போற்றிய மாலொருபாகன் வடிவத்தையும் பிரமாணமாக்கித் திருமாலும் சிவபெருமானும் ஒன்றென்று கூறுகின்றனர். இக்கூற்று ஏற்புடையதா?

எல்லாம்வல்ல தன்மையுள்ள சிவபெருமான் எவ்வடிவும் கொள்வான் என்பதனால், தாமே படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய தொழில்களைச் செய்வதற்குப் பிரமன், திருமால், உருத்திரன் வடிவமும் கொள்ளும் திறனுடையவன் என்பது தெளிவுறும். இவ்வாறு, சிவபெருமானே எடுக்கும் பிரமன், திருமால், உருத்திரன் வடிவங்கள் சம்புபட்சப் பிரமன், சம்புபட்சத் திருமால், சம்புபட்ச உருத்திரன் (மகாருத்திரன்) என்று வழங்கப்படும். மேலும், சிவபெருமானின் சத்திக்குப் ஆண்வடிவம் கொடுத்தால் அவ்வடிவமும் திருமால் வடிவமாகவே கொள்ளப்படும். உயிர்வர்க்கப் பிரமனாதியோர், அணுவர்க்கப் பிரமன், அணுவர்க்கத் திருமால், அணுவர்க்க உருத்திரன், அணுவர்க்க மகேசுவரன், அணுவர்க்கச் சதாசிவன் என்று கூறப்படுவர்.

சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமக்கும் கூலியாளாக வடிவம் தாங்கியதுபோல், தாய்ப்பன்றி வடிவம் தாங்கியதுபோல், எந்தவடிவும் தாங்கவல்லவர் என்பதனை உணர்த்துவதற்குக் கூறப்படும் வடிவமே மாலொருபாகன் வடிவமும் சம்புபட்ச உருவங்களுமாகும். இச்சம்புபட்ச பிரமனாதி வடிவங்கள் சுத்தவித்தைத் தத்துவத்தில் சிவபெருமானே கொள்ளும் வடிவமாகச் சைவசித்தாந்தம் கூறும். அவதாரங்கள் எடுக்கும் அணுவர்க்கத் திருமால் ஆன்மதத்துவ எல்லைக்குள் விளங்கும் திருமாலாகும். இவ்வேறுபாடுகள் தெரியாது, பிறந்து இறக்கும் உயிர்களையும் சிவபெருமானையும் ஒன்றாகக் குழப்பியடிப்பது உயர்ந்தோர் வழக்குக்கு இழுக்காகும்!

இராமனும் சிவனும் ஒன்றென்றும் இராமனும் திருமாலும் ஒன்றென்று கம்பரின் பாடல்களை முன்வைத்து, **"கம்பர் செய்த சில வர்ணனைகளால், திருமாலும் சிவனும் ஒருவரேயென நினைந்த உயர்ந்தோர்,அக்கருத்தில் ஒன்றி உணர்ந்து உவந்தனர். உணராரும் உணராதாராய் வேற்றுமை விரித்துத் தம்முள் மயங்கினர்"** என்று கம்பராமாயணப்பத்தர் கூறியிருப்பது ஏற்புடையதாகுமா?

இல்லை!

**"இருவரால் மாறுகாணா எம்பிரான் தம்பிரானாம்"** என்றும், **"இடபம் அதுவாய்த் தாங்கினான் திருமால்காண்"** என்றும், **"அரியொடு பிரமற்கு அளவு அறி ஒண்ணான்"** என்றும், இன்னும் பிறவாறும் மாணிக்கவாசகப்பெருமானும், திருஞானசம்பந்தப்பெருமான் தமது பதிகந்தோறும் ஒன்பதாம் பாடலில் திருமாலும் பிரமனும் அறியமுடியாச் சிவபெருமான் என்று சாதித்து அருளுவதும் உயர்வற்றோர் செயலாக கம்பராமாயணப் பத்தர் குழாத்திற்குத் தோன்றலாம்! ஆனால், கம்பராமாயணப் பத்தர் குழாத்திற்கு உமாதேவியார் திருமுலைப்பால் கொடுக்கவில்லை! கம்பராமாயணப் பத்தர் குழாத்தின்பொருட்டுச் சிவபெருமான் நரியைப் பரியாக்கவில்லை! எனினும், கம்பராமாயணப் பத்தர் குழாம் தம்மை திருஞானசம்பந்தராதி நாயன்மாரிலும் உயர்ந்தோராய்ச் சிந்தித்து மகிழ்வதற்கு முழுச்சுதந்திரம் உண்டாம்! ஆனால், சைவசமயத்தாருக்குத் திருமாலிலும் உயர்ந்தோரே நாயன்மாராகும். திருமால் சகலவர்க்க உயிர். நாயன்மார் முத்தான்மாக்களாம். திருஞானசம்பந்தப் பெருமானையே வழிபட்டு அருள்பெற்றவர் 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீர்காழி கண்ணுடைய வள்ளலார். இவர் செய்த நூல் ஒழிவில் ஒடுக்கமாகும். இந்நூலில், 'மாலயனாய் இந்திரனாய் வாழுவதாய் மாளுவதாம்' என்றும்,

**'அரிபிரமர் இந்திரர்கள் வாழ் அநித்த நம்வாழ்வு ஒரு பொருளோ'** என்றும் திருமால் பிரமன் இந்திரன் முதலியோர் பிறப்பு இறப்புக்குரியவர்கள் என்றே அருளிச்செய்யப்பட்டுள்ளது. ஆக, நாயன்மார்கள் மட்டுமல்ல நாயன்மார்களைக் குருவாகக் கொண்டு அருள்பெற்றவர்களும் நமக்குக் காட்டியருளிய நெறி, சிவபெருமானைப் பொதுநீக்கி (பலரில் ஒருதெய்வமாகவோ) உயிர்வர்க்க் திருமாலாதியருக்கு இணையாகவோ கொள்ளாது, பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் நெறி வழிபடுவதனையேயாகும்! **"மண் அளந்தான் மலரோன் முதல் தேவர்கள் எண் அளந்து இன்ன நினைக்கிலார் ஈசனை"** என்ற திருமூலர்பெருமான், கம்பராமாயணப் பத்தர் குழாத்தின் பாச அறிவில் **"மயங்கியவர்"** ஆகட்டும்! ஆனால், சைவ சமயத்தாராகிய நாம் மிகத்தெளிவுடன் உயர்வது கடனாகும்!

சிவபெருமானையே பரம்பொருளாகக்கொண்டு சைவசித்தாந்த நெறி நின்று சிவசாயுச்சியம் பெற்றோர் 36 தத்துவங்களையும் கடந்து பேரின்பம் அனுபவிப்பர் என்றும், 24 தத்துவங்களையே எல்லையாகக் கொண்ட திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டோருக்கு, அத்தத்துவ எல்லைவரையேனும் உயர்வு உண்டென்றும் ஏற்று நிற்கும் சைவசமயம், சிவபெருமானையும் இராமனையும் திருமாலையும் ஒன்றென்று உரைசெய்து குழப்புவோர் நெறியைச் சுமார்த்த ஏகான்மவாதமத நெறியென்று வரையறுத்து, வைணவருக்கும் கீழான பதத்தையே எய்துவர் என்று குறிப்பிடுகின்றது. கம்பராமாயணத்தைச் சிக்கெனப்பிடித்து நிற்பவருக்குச் சைவக்குழாத்தின் மத்தியிலும் வைணவக்குழாத்தின் மத்தியிலும் சுமார்த்த ஏகான்மவாதமதக் குழாத்தின் மத்தியிலும் தம் பிரசங்கங்களை முன்னெடுக்கவேண்டிய தேவையிருப்பதனால், சமயக்கற்பின்றி எல்லாவற்றையும் ஒன்றாகக் குழப்பித் தம்துறை வளர்ச்சியையே நோக்காகக் கொண்டிருப்பர். பொருளின்பத்தின்பொருட்டு சைவ உண்மைகளைத் திரிப்போருக்கு, சிவவிரோதப்பலனே கதியாகும்!


**எல்லாம் திருவருட் சம்மதம்**



தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.   www.thennadu.org

**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# The Tamil New Year “Debate” is more than just Calendars

The debate surrounding Tamil New Year is often presented as a simple disagreement between Thai and Chithirai. But in reality, this discussion is far bigger than just a date on a calendar. It raises deeper questions about Tamil history, cultural continuity, and how political movements can gradually reshape public understanding of tradition over time.

For centuries, Chithirai has been observed by Tamil communities as the beginning of the Tamil New Year. Yet in recent decades, alternative narratives promoting Thai as Tamil New Year have gained increasing visibility. Supporters often point toward claims such as a gathering of “500 Tamil scholars” in 1921 who supposedly declared Thai as the official New Year. However, historians and writers such as Mannar Mannan have questioned the historical evidence behind these assertions, arguing that reliable documentation for such declarations remains unclear.

The discussion also extends beyond New Year celebrations themselves. Traditional observances connected to Thiruvalluvar Day, once associated with Vaikasi Anusham, were gradually shifted across different dates over time. To many, these changes represent more than administrative adjustments; they reflect how cultural memory itself can evolve through political and ideological influence.

One of the most debated arguments is the connection between the rise of Thai Puthandu and the influence of Dravidian political movements during the 20th century. Some scholars argue that the revival and popularisation of Thai as Tamil New Year emerged not from ancient Tamil consensus, but from later ideological reinterpretations shaped by historical developments during and after the Nayakkar period.

Regardless of where one stands on the issue, the debate highlights an important reality: traditions survive only when communities actively preserve and question them. Cultural identity cannot simply rely on repetition alone; it also requires historical awareness.

Today, we are fortunate that the debate is merely ‘Is Tamil New Year in Chithirai or Thai?’ If we fail to defend and preserve our traditions now, then perhaps a hundred years from today, the debate will become: Was Rajaraja Chola Tamil or Telugu?.

Whether one agrees with this statement or not, the warning behind it is significant. The conversation about the Tamil New Year is ultimately about more than calendars. It is about how a civilisation remembers itself.

# Saiva Saint Thirukurippu Nayanar - The washerman








Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

## A country fit to hold the Lord

The Periya Puranam opens the account of the 18th amongst the 63 saivite saints with the land that produced him, and only afterward with the man. Sekkizhar begins from the premise that the Lord extends boundless grace to all living beings, and that he does so through a particular mechanism. He grants the soul a body. The body is the instrument through which a soul accumulates karma, and the accumulation of karma is what eventually makes possible release from the cycle of birth and death.

Into this frame Sekkizhar places Thondai Naadu, the Tamil country in which Kanchipuram sits. He establishes its sanctity through an anecdote of Umai Ammai, the consort herself, who worshipped Sivaperuman in Thondai Naadu, and the worship she offered was conducted with the full glory of the Agamams and the Vedams. Kanchipuram is presented as a place where strictly Agamic Siva pusai is kept alive in exemplary form, a standard so high that even the Goddess performed her worship here. The land is more than the accidental birthplace of a devotee. It is a land that had, in effect, earned its association with Siva devotees.

## Five and eight: the grammar of the worship

There is a feature of this section worth drawing out. Sekkizhar composes the passage in two registers, and the registers are keyed to number. The earlier part, which treats Parvati's worship, is built on a poetic grammar inspired by the number five. Five, carries a feminine association, and so the verses that describe the Goddess at worship are shaped around it. The latter part, which describes the form of the Lord himself, shifts its grammar to the basis of eight, the number proper to the description of his form.

The feminine principle and the form of the Lord are each given the numerical architecture that belongs to them, so that the structure of the verse carries meaning before a single image is unpacked. These are counted among the prides of Thondai Naadu, and Sekkizhar treats them as such.

## The temper of the people

Having sanctified the land, Sekkizhar turns to the people who live on it, and here the praise becomes moral rather than ritual. The people of this country live a righteous life held in a

perpetual middle ground, refusing extremism in either direction largely. To illustrate the austerity and pride the people carry, Sekkizhar cites a specific incident. Seventy Vellalars together committed mortal dissolution by fire because they had failed in a duty, the duty of protecting the life of a man, a life (a rabbithole) that had been stained by homicide and betrayal. The example turns on the people's response to their own failure, and the

deed itself is incidental to it. They held themselves to a standard so absolute that the failure to discharge a duty was answered with their own lives.

This is deliberate placement on Sekkizhar's part. He is building, in advance, the moral universe in which the saint's later act will make sense. The land also contains, as he notes, all four of the landscapes recognised in the Tamil divisions, so that it is complete in its geography as it is in its piety. A man raised among people who would burn rather than fail a duty will, when his own moment comes, treat a broken promise as something worth dying over. The land has already told us this before the saint has done anything at all. A rather comprehensive spoiler to the test.

### Why call him Tirukkurippu Thondar

The saint is a Vannar, a washerman tribe, from a caste the text treats as very old and ancient. His devotion to the Lord is without limit and without condition. It does not rise in joy or fall in pain. It simply holds. The name he is known by points to the structure of that devotion, because he worships through three faculties at once.

In his mind, he worships the Lord and the Lord's devotees. Through his mouth, he recites the praise of the Lord and the Lord's devotees. And through his body, he again serves the Lord and the devotees, and here the body means the work of his hands. His service is the washing of clothes. He purifies the garments of the devotees of Siva, and Sekkizhar makes the inner meaning of this plain. As he cleanses the cloth, he is also destroying the karma of his own birth, removing the three impurities the tradition names as aanavam, kanmam and maayai. The washing is itself the devotion, with no separation between the labour and the worship. The act that looks from the outside like menial labour is, from the inside, the dissolution of the very bonds that hold a soul in embodiment. He served the devotees so well, reading their needs before they were spoken, that he earned the name Tirukkurippu Thondar, the servant who divines intention.

### The Lord's visit

To a saint of this order, the Lord comes in person. It is the rainy season. He comes in the guise of a sage, in soiled clothing, with matted hair and the bearing of a wandering ascetic with nothing to his name. His body is pale with the holy ash, but the cloth on him is so filthy that it has taken the colour of the rain-darkened sky. The saint rises, invites him in, and greets him in the manner reserved for the welcoming of sages.

The saint offers to purify the cloth. The Lord, still in his disguise, sets the condition. He will not part with the rag and risk freezing in the cold, but if it can be returned by sunset, washed, the saint may take it. The saint, moved by the emaciated state of the visitor and wanting to relieve him, agrees to the terms and carries the cloth to the river.

### The Test

It is at the river that the test reveals itself. As the saint sets to washing, the Lord intensifies the rain. The cloth will not dry. Sunset is approaching and the condition cannot be met. The saint is overtaken by something far heavier than frustration. He believes he has harmed the sage who trusted him. He has left an old and frail visitor exposed to the cold, and he has broken the promise he gave. When the full weight of this lands on him, the failure of the duty and the suffering inflicted on the one who came to him, he resolves that he cannot live with it. He moves to force his head against the washing stone and end his life, much to what one would expect from the illustrious descriptions earlier, of Kanchipuram's folk.

The seventy Vellalars who walked into fire for a failed duty are answered here by a single washerman at a riverbank, willing to do the same for the same reason.

Before the blow can land, a hand rises from the rock and shields his head. It is the hand of the Lord, recognised as the hand of Ekambaranathar, the presiding deity of Kanchipuram, from the ornaments and the anatomy, quite resemblant of the fabulous temple bronze. At that instant the poet depicts that a rain of flowers begins to fall, the gods showering blossoms in praise of the state of his mind, the readiness to die rather than fail in service. They praise his disposition rather than any feat he accomplished. The Lord then speaks. He has proclaimed this devotion to all the worlds. The saint is to live now in eternity, in the abode of Siva. And so he reached the Supreme Abode, liberated.

### What the account is for

Sekkizhar gives this saint a brief tale and a long treatment, and the disproportion is the point. The narrative incident is small. A cloth, a promise, a downpour, a stone, and a passionate mental state. What he surrounds it with is large: the theology of embodiment, the sanctity of a whole country, the numerical grammar of worship, the moral temper of a people who would rather die than fail. By the time the washerman lifts his head toward the rock, every element needed to read his act correctly is already in place. His willingness to die or much rather punish himself, is neither despair nor excess drama. It is the same uncompromising fidelity that the land itself was shown to carry, expressed by the humblest of its sons and daughters and everyone in between through the work of his hands. The lowest labour and the highest devotion are revealed to be one thing to the dias at Chithambaram, in the Thousand-Pillared Hall of the Nadaraasa temple, where Sekkizhar composed the epic and presented it as a grand event. Thirukurippu Thondar is remembered year on year on the Chithirai Swathi day for the height of morals imparted from his story and the people of his tribe and land.

# யாழ் பல்கலைக்கழக முதலாவது சைவசித்தாந்த ஆய்வு மாநாட்டில் பேராசிரியர் நல்லூர் ச.சரவணன் அவர்களின் ஆதார சுருதி உரை



பேராசிரியர் நல்லூர் ச.சரவணன்
தலைவர் - சைவசித்தாந்த துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

ஆதார சுருதி உரையானது இரண்டு சிந்தனைகளை உங்களுக்கு முன்வைக்கின்றது. ஒன்று நம்முடைய மரபானது அல்லது தமிழர் தத்துவ மரபு என்று சொல்லப்படுகின்ற சைவசித்தாந்தம் எப்படிப்பட்ட சிந்தனையை உலக அளவில் தற்கால சூழமைவை எதிர்கொள்கிறது. அல்லது தற்கால சூழமைவிற்கு எப்படி தன்னுடைய கருத்தியலை வழங்கியிருக்கிறது என்பதனை நாம் தெரிந்து கொள்கின்ற ஒரு அடிப்படை வரலாற்றையும், நம்முடைய கருத்தியல் அல்லது கொள்கை விளக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்பது தான் என்னுடைய இரண்டு வகையான செய்திகளாக அமையும்.

**(கடந்த திங்கள் தொடர்ச்சி)**

அவர்தான் காயாவரோஹணம் என்று சொல்லப் படுகின்ற கர்வான் என்ற இடத்தைச் சார்ந்தவர். குஜராத் மாநிலத்தில் இருக்கின்றார். அவரை அடுத்துதான் 12 ஆவது குருவினுடைய வரலாற்றோடு அவருடைய காலத்தை முடிவு செய்து. ஆர்.ஜி. பண்டார்கர், வி.எஸ். பாதக் போன்றவர்கள் எல்லோரும் அவரது வரலாற்றை முடிவு



தொகுப்பாளர்
செல்வி. சதீஸ்வரன் டிலக்ஷனா
நான்காம் வருட மாணவி
யாழ் பல்கலைக்கழகம்

செய்கின்றார்கள். இது கி.மு இரண்டாம் நூற்றாண்டு. அப்போது லகுலீச பாசுபதம் என்பது சைவத்தினுடைய முயற்சியினால் உருவாக்கப்பட்டது. அதனுடைய மிக முக்கியமான அம்சம் என்னவென்று கேட்டால் நீங்கள் காபாலிக பயிற்சி மேற்கொண்டால் ஒரு பிராமணனுடைய தலையை வெட்டி வைதீகத்திற்கு எதிராக உங்களுடைய செயல்பாட்டை மேற்கொள்ள வேண்டும். சாங்கிய மரபில் பஞ்சமகாரம் – மது, மாது, மைத்துனம், மச்சம் போன்றவற்றை நீங்கள் கைக்கொண்டு நீங்கள் பெறுகின்ற அந்த இன்ப நுகர்ச்சிதான் காபாலிகம்.

இந்த காபாலிகத்துக்கு இன்னொரு மனிதரை நீங்கள் பயிற்சிக்கு உள்ளாக்க வேண்டும் என்றால் நீங்கள் கொடுக்கிற செயல்முறைகள் எல்லாம் தீக்கை. இந்த முறையை மாற்றி லகுலீசம் என்ன செய்கின்றது என்றால் பிறப்பு என்பது இங்கே முக்கியம் என்றும் வைதீகனாக பிறந்தால் தான் நீங்கள் அதை செய்ய முடியும் என்பதையும் வரையறுக்கிறது. அங்குதான் உங்களுக்கு சைவத்திற்கான ஒரு வேறுபாடு தொடங்குகின்றது. லகுலீசம் என்பது வைதீகத்தினால் ஏற்படுத்தப்பட்ட சைவம். அது இங்கே இருக்கிற தாந்திரீக பாசுபதத்தில் இருந்து பிறப்பு உரிமைக்காக மாற்றம் பெற்றது. ஆனால் காபாலிகம் என்பது பிறப்பு உரிமை என்பதாக இல்லாமல் செயல் உரிமை என்பதாக இருக்கின்ற சைவத்தினுடைய மூலம். இந்த காபாலிகம் தான் காலாமுகம் போன்றவைகளாக விரிகின்றது. வீர சைவமாக நாம் அதை இன்றைக்கு பார்க்கிறோம். இப்போது இது ஒரு வரலாற்றுப் போக்கு.

ஏன் இதை நான் இங்கே குறிப்பிட்டேன் என்றால் தொடக்க காலம் கி.மு 1500 இற்கு முன்னால் இருந்து கி.மு 5000 காலம் தொட்டு நீங்கள் சைவத்தினுடைய வரலாற்றை வேளாண் உற்பத்திச் சடங்கில் இருந்து எடுத்துப் பார்த்தால் பிறப்பு என்பதற்கு மாற்றாகவும் பிறப்பு பொதுமை என்பதாகவும் பிறப்பு என்பது உங்களை ஏற்றத்தாழ்வுக்கு உட்படுத்தும் என்பதாகவும் ஒரு தொடக்க காலத்தில் இருந்தே தாந்திரீகப் பயிற்சி முறையில் உணர்ந்து அதனுடைய முயற்சியாகத்தான் இன்றைக்கு தமிழர் மரபில் அதனுடைய அடையாளத்தை காரைக்கால் அம்மையார் தொடங்கி நாம் பார்க்கிற

சைவத்தை பார்கிறோம். நமக்கு காரைக்கால் அம்மையார் தொடங்கி சேக்கிழார் பெரியபுராணம் வரை தெளிவாக குறிப்பிடப்பட்டு, பிறகு சாத்திர மரபில் அது மெய்கண்ட சாத்திர மரபில் விரிந்து மறுபடியும் சாத்திரத் தோத்திர மரபாக அருணகிரிநாதர் குமரகுருபரர், தாயுமானவர், இராமலிங்கர், பாம்பன், குமரகுரு வரை விரிந்து இருக்கின்றது.

இந்த முயற்சியில் உங்களுக்கு பிறப்பு என்கின்ற உரிமையைக் கடந்து ஏற்றத்தாழ்வு அற்ற அனைவருக்குமான உரிமையை, கடவுளை அடைகின்ற பயிற்சிக்கான ஒரு உரிமையை வழங்குகின்ற சமயமாக சைவ சித்தாந்தம் இருக்கின்றது. சைவ சித்தாந்தம் என்பது இந்த உலகர் அனைவருக்குமான பிறப்பு எனும் அடையாளத்தைக் கடந்து கடவுளுக்கான ஒரு செயல்பாட்டு உரிமையை வழங்குகிற சமயமாக இருக்கின்றது என்பது என்னுடைய முதல் கருத்து. இந்த கருத்தை நீங்கள் இன்னும் விரிவாக புரிந்து கொள்ள வேண்டும். இதில் இன்னும் கூடுதலாக உங்களுக்கு வினா விடை அல்லது இதற்கான ஐயங்கள் இருக்குமாயின் அதை நாம் தொடர்ந்து சிந்திக்கலாம் என்பதாக சொல்லி இந்த பகுதியை நான் இதோடு நிறைவு செய்கின்றேன்.

அதிலே இன்னொரு அடையாளம் தொல்லியல் சான்றும் நீங்கள் அதை சந்திக்கலாம். அதுதான் கட்டுவாங்கம் என்று சொல்லப்படும் ஆயுதம். கட்டுவாங்கம் என்று சொல்லப்படுகின்ற ஆயுதத்தில் ஒரு கொம்பின் நுனியில் ஒரு மண்டையோடு சொருகப்பட்டிருக்கும். அந்த மண்டையோட்டினுடைய கண்கள் சார்ந்து கண்களுக்கு உள்ளே இருந்து ஒரு பாம்பு வெளியே வரும். அதனுடைய அடையாளம் தான் கட்டுவாங்கம். அது ஒரு சிறப்பான அடையாளம். அது காபாலிகனுடைய கையில் இருக்கும். அதனுடைய அடிப்படை என்ன என்றால் முதுகுத்தண்டு வழியாக ஏறுகின்ற ஆற்றல். அது பாம்பு மூளையை சார்ந்து கண்கள் மூலமாக உங்களுக்கு எப்படி செயலாக்கம் பெறுகிறது என்கின்ற தாந்திரீக வித்தையாக அது சொல்லப்படுகிறது.

அந்த கட்டுவாங்கம் காபாலிகம் இன்றைக்கு நாம் பேசுகிற சைவம் வரை காணப்படுகிறது. லகுலீசம் என்பது அப்படி அல்ல ஒரு ஆணாதிக்க சமயமாக உருவானது. அதனால் தான் ஆண் குறியை வைத்து அவர்கள் சிவலிங்கத்தை எழுப்பினார்கள். அதுதான் குடிமல்லத்தில் இருக்கிற ஆண்குறிக்கு உள்ளே இருக்கிற சிவன். அதற்கு உள்ளே அவர் குறியை ஆண் குறியை தூக்கி வைத்திருக்கிற ஒரு அடையாளம் அது தொடர்ந்து லகுலீசம் என்பதாக இருக்கிறவர்கள் ஆண்குறியை தூக்கி வைத்திருப்பார்கள். இது ஆணாதிக்கம் தன்னுடைய பெண் தாய் வழி உரிமையின் பெண்குறியை அதற்கு மாற்றாக ஆணாதிக்கத்தினுடைய அடையாளம் சார்புடைய சமய மரபினர்களுடைய அடையாளமாக இருக்கிறது.

அவர்கள் இன்னொன்றையும் வைத்திருப்பார்கள் தண்டம் வைத்து அதிலே பாம்பு இருக்கும் மண்டையோடு இருக்காது காரணம் அதிகாரத்தில் ஆற்றலை பயன்படுத்துவது என்பதாக அந்த லகுலீச பாசுபதம் மாறும். இப்படியாயின் ஒரு இரண்டு பெரிய இடைவெளியில் சைவத்தினுடைய வரலாற்று மூலத்தை அறிந்து கொள்ள வேண்டும். இதற்கான காரணம் பிறப்பு ஏற்றத் தாழ்வை உடைப்பது என்பதுதான் அது எல்லா காலத்துக்கும் பொருத்தமான ஒன்றாக சைவத்தினுடைய அடிப்படையாக இருக்கின்றது என்பதை தொல்பழங்கால வரலாற்றின் மூலம் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தான் இந்த மாநாட்டில் குறிப்பிடுகின்றேன். காரைக்கால் அம்மையார் சைவ சமயத்தை கட்டமைத்தார் என்பது அனைவரும் அறிந்த செய்திதான். ஏன் காரைக்கால் அம்மையாரை சைவ சமயத்தை கட்டமைத்தவர் என்று சொல்கிறோம் என்று சொன்னால் தமிழ் சமூகத்தில் வழிபாடு என்பது நாம் கதிரவன் தொடங்கி பல்வேறு பொருள்களை வழிபடுகின்ற அந்த வழிபாட்டு முறையில் பார்க்கிறோம்.


இந்த வரலாற்றில் கந்து என்பது சமிக்ஞை அல்லது அறிவுறுத்தல் மூலமாக பெறப்பட்ட கடவுள் உணர்ச்சி இது இயற்கை பொருள்களைக் கடந்த ஒரு மனித உயிர் அதற்குள் தனக்கு அறிவுறுத்திய ஒன்றை தெரிந்து கொண்ட முதல் நிலை இது மரத்தில் பொருத்தப்பட்ட போது அதற்கு கந்து, அதுதான் கந்தன் என்பதற்கான மூலமாக வருகிறது. இந்த கந்த சமஸ்கிருதத்தில் ஸ்கந்து ஆனது. பின் கந்தன் என்பதாக மாறியது. ஆனால் கந்து என்பதுதான் அதனுடைய மூலம்.

இது பற்றி தமிழ் அறிஞர்களுக்குள்ளே மாறுபட்ட கருத்து உண்டு. அது பற்றி விவாதிப்பதற்கு நாம் சில ஆய்வு மாநாடுகளை தனியாக நடத்த வேண்டியிருக்கும். அது தவிர நல்லூர் கந்தன் இங்கே இருக்கிறார் அவருக்கும் வேல்தான் அந்த வேல் என்கின்ற ஆயுதம் கூட தொல்காப்பியத்தில் மிக பழங்கால மக்கள் பயன்படுத்திய கோடாரியினுடைய அடுத்த கட்டமாக உலக காலத்தில் செயற்படுத்தப்பட்ட ஒன்று அது என்பதாகவும் தொல்லியல் அறிஞர்களும் அது பற்றி சார்பாக நமக்கு பேசுகிறார்கள். இந்த வரலாற்றில் இந்த கந்து என்பதாகவும் சிறப்பாக கடவுள் என்று சொன்னாலே முருகு என்பதாகவும் வேலன் வெறியாடும் போது அவனுக்குள் இருந்த ஒன்றாகவும் முருகு என்ற கடவுள் எனவும் பேசப்பட்ட ஆதலால் சேய் என்று தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டது.

(தொடரும்...)

திருச்சிற்றம்பலம்

# திருவாவடுதுறை ஆதீன இலங்கை யாழ்ப்பாணச் சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத் தொடக்கவிழா



திருவாவடுதுறை ஆதீன 24ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளசீர் அம்பலவாண தேசிக ஞானசம்பந்த பரமாசரிய சுவாமிகளின் அருளாணைப்படி, இலங்கையில் முதன்முறையாக நிறுவப்பட்டுள்ள **“திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சி மையம்”** அதன் தொடக்கவிழாவோடு மிக விமரிசையாக ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை மைய அமைப்பாளர் சைவப் புலவர் இரா. ஜீவன்பிரசான் அவர்களின் நெறிப்படுத்தலில் நடைபெறும் இத்திருமுறை வகுப்புகளைத் தொடங்கி வைப்பதற்காகத் திருவாவடுதுறை ஆதீனத் திருவிடைமருதூர் கட்டளை விசாரணை சீர்வளர்சீர் திருச்சிற்றம்பல தம்பிரான் சுவாமிகள், மைய இயக்குநர் திருவாளர் சபா சண்முகசுந்தரம், கள்ளக்குறிச்சி சைவசித்தாந்த பேரவை நிறுவனர் திருவாளர் தமிழழகன் ஆகியோர் ஏனைய பிரமுகர்களுடன் எதிர்வரும் 04.06.2026 அன்று இலங்கை வருகை தருகிறார்கள்.

இலங்கைக்கு வருகை தரும் பெருமகனார்கள், தென்னாட்டில் நான்கு தினங்கள் தங்கியிருந்து விசேட வழிபாடுகள் ஆற்றிடவும் திருவருள் கூடியுள்ளது. இப் பயிற்சி நெறியானது முதற்கட்டமாக யாழ்ப்பாணம், மாத்தளை, ஓட்டன்குளம், மானிப்பாய் ஆகிய நான்கு முக்கிய இடங்களில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. சைவமும் திருமுறையும் தழைத்தோங்கப் பங்காற்றும் இப்புனித மையத்தின் தொடக்க விழாவில் சைவப் பெருமக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!**

# ஓதுவார் திருத்தணி சுவாமிநாதன் ஐயா அவர்களுக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கி வைப்பு!



தமிழிசை மரபையும் பன்னிரு திருமுறையையும் தன் மூச்சாகக் கொண்டு, அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தன்னலம் கருதாது இறைவனுக்குத் திருமுறைப் பண்ணிசையால் விண்ணப்பம் செய்து வரும் தமிழகத்தின் மூத்த ஓதுவாமூர்த்தி திருத்தணி என்.சுவாமிநாதன் அவர்களுக்கு, இந்தியாவின் உயரிய **‘பத்மஸ்ரீ’** விருது, கடந்த 27.05.2026 அன்று குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற உன்னத விழாவில், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் கரங்களால் வழங்கி வைக்கப்பட்டது.

தஞ்சை மாவட்டம் திருக்கருகாவூரில் பிறந்த 81 வயதான சுவாமிநாதன் ஐயா அவர்கள், தருமபுர ஆதீனத் தேவாரப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குத் தேவாரம் கற்பித்து வருகின்றார். திருத்தணி முருகன் கோயிலில் ஓதுவாராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னும், 274 தேவாரத் திருத்தலங்களிலும் திருமுறைப் பாடல்களைப் பாடி பத்தி நெறியைப் பரப்பி வரும் இவருக்கு, ஓதுவார் வரலாற்றிலேயே முதன்முறையாக இந்த உயரிய விருது கிடைத்துள்ளதை **“திருமுறைக்குக் கிடைத்த மகுடம்”** எனத் தருமபுர ஆதீனக் குருமகாசந்நிதானம் உள்ளிட்ட உலகளாவிய சைவப் பெரியோர்கள் போற்றி மகிழ்ந்துள்ளனர்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!**

# தென்னாட்டு நிகழ்வுகள்


அப்பர் குருபூசை (11-05-2026)


நம்பியாண்டார் நம்பி குருபூசை (20-05-2026)


சேக்கிழார் குருபூசை (21-05-2026)


வடமாகாண சபை சொக்கநாதர் முதலாம் ஆண்டு சங்குநீராட்டு (23-05-2026)


உயர்தரப் பரீட்சையில் மாவட்ட முன்னிலை பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு (01-05-2026)

செல்வன். சந்திரபாலா ஹதுசன்

செல்வன். அனுரகாந்தன் விஸ்வகாந்தன்

செல்வி. தருணிகா பத்மலிங்கம்

# தென்னாட்டு நிகழ்வுகள்



சித்திரைத் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (01-05-2026)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் எழுபதாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 விடை நல்லோரை வைகாசித் திங்கள் 16ம் நாள் நிறைமதி அன்று (30-05-2026 சனிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org